Regd. No. M. 4392

ரயிலிலிருந்து சாமான்களை எடுத்து வரவோ வெளியூர்களுக்கு சாமான்களை அனுப்பவோ நீங்கள் சிரமப்பட வேண்டாம். விவரங்களுக்கு எழுதுங்கள்



மதராஸ் & தென் மராட்டா ரயில்வேக்கு லோகல் டெலிவரி கண்ட்ராக்டர்கள்

202-3, மவுண்டு ரோடு (போன் :-8536) மதராஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras



அரைக்கீரை விதைத் தைலம்

●

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வடிதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

●

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர்.

அண்டு கோ., கும்பகோணம்.

●

மதராஸ் விநி. ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

●

பாலக்காட்டுக்கு ஸோல் ஏஜெண்டுகளும்
கோயமுத்தூருக்கு ஸ்டாக்கிஸ்டுகளும்

தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்

அவநாசி ரோடு — கோயமுத்தூர்



குழந்தையின்

ஆரோக்கியம்

தாயைப் பொருத்துள்ளது! . . .

ஏனெனில் அச்சிறு குழந்தைக்கு வலுவையும் சீர் வளர்ச்சியையும் அளிக்கும்படி ஆகாரம் கொடுத்துப் போஷிப்பது தாயின் முக்கிய கடமை. ஆகவே முதலாவதாக தாயாரின் தேகாரோக்கியத்திற்கு **சாந்தி அசோகா** ஆதாரமளிக்கட்டும். அது ஒரு சிறந்த புஷ்டியுள்ள டானிக். மேலும் அதில் ஸ்திரீகளின் சக்தியையும் தேகாரோக்கியத்தையும் அழிக்கக்கூடிய சகலவிதமான வியாதிகளையும் அகற்றும் **அசோகா** எனனும் மிகப் புராதனமான மூலிகை சேர்ந்துள்ளது.

சாந்தி அசோகா

சிறந்த கர்ப்பாசய ஔஷதம்

சாந்தி குடீரம், தனுகு, மேல்கோதாவரி ஜில்லா

சோல் ஏஜண்டுகள் :

ஸ்ரீ கிருஷ்ணா ஜெனரல் ஸ்டோர்ஸ், தனுகு

தென் இந்தியாவிற்கு ஏஜண்டுகள் :

ஸ்மிட் ஹோம், சேக்ஸ் & சன்ஸ்,

3, பந்தர் தெரு, ஜி. டி. மதராஸ்.

நகைச்சுவை அரசர்

திரு N. S. கிருஷ்ணன் அவர்களின்

மங்கள பாலகான சபையாரால்



★

5-11-44 முதல்

மகத்தான

3-வது வாரம்!

சென்னை

ஒற்றைவாடை தியேட்டரில்

★

இழந்த காதல்

(நாடகம்)

★

தென்னிந்திய ஓவிய நிபுணர் K. மாதவன் அவர்களால் தயாரிக்கப்பட்ட அற்புதமான சீன்கள், ஆச்சரியமான காட்சி ஜோடனைகள் நிறைந்தது

பாடல்கள்: உடுமலை நாராயணக் கவி

சனி ஞாயிறுகளில் [illegible]

டிக்கட் விபரம்: ரூ. 3-0-0, 1-12-0, 1-2-0, 0-9-0, 0-4-6

[illegible]

P. K. பிள்ளை, மானேஜர்.

கல்கி



KALKI நவம்பர் 5, 1944 4 அணா

தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் மகாநாட்டை ஒத்தி வைத்துக் கொண்டே போவதுபோல் போகாமல், குறிப்பிட்ட தேதியிலேயே, சண்டை சச்சரவின்றி, மகாநாட்டைக் கூட்டினார்கள். கூடி ஒரு யுக்தியும் கண்டு பிடித்தார்கள்.

தேவர்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்தார்கள். ஒரு கட்சி மாமியாகரனைச் சேர்ந்து கொண்டது. இன்னொரு கட்சி மருமகாகரனைச் சேர்ந்து கொண்டது. இரண்டு கட்சித் தேவர்களும் தங்கள் தங்கள் கட்சி அசுரனை எதிரி அசுரனுக்கு விரோதமாகத் தூண்டிக் கொண்டே வந்தார்கள்.

"எத்தனை நாளைக்குத்தான் மருமகாகரனை இப்படியே விட்டு வைப்பாய்? உனக்கு வெட்கமில்லையா? மானமில்லையா? அவனை ஒழித்து விட்டு மறு காரியம் பார்க்க வேண்டாமா?" என்று மாமியாகரனைப் பார்த்து அவன் பக்கத்துத் தேவர்கள் சொன்னார்கள்.

"எத்தனை நாளைக்குத்தான் மாமியாகரனை இப்படியே விட்டு வைப்பாய்? உனக்கு ரோஷமும் இல்லையா? ஆணவம் இல்லையா? அவனை ஒழித்து விட்டு மறு காரியம் பார்க்க வேண்டாமா?" என்று மருமகாகரனைப் பார்த்து அவன் பக்கத்துத் தேவர்கள் சொன்னார்கள்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் அல்லவா? ஆகவே அடுத்த சமயம் யுத்தம் நேர்ந்தால் மாமியாகரனை ஒழித்து விட்டுத்தான் மறு காரியம் என்று மருமகாகரன் சபதம் பூண்டான். அதே மாதிரி மருமகாகரனை ஒழித்து விட்டுத்தான் மறு காரியம் என்று மாமியாகரனும் சபதம் பூண்டான்.

இடையில் ஏதோ ஒரு சின்ன காரணத்துக்காக இரண்டு பேருக்கு மிடையில் ஒரு பெருத்த போர் மூண்டது. இரண்டு அசுரர்களும் கைகலந்தார்கள். "இந்தப் போரில் எனக்கா, உனக்கா, பார்த்து விடுவது" என்று இரண்டு பேரும் சபதம் பூண்டு வெகு கடுமையாகப் போர் புரிந்தார்கள்.

இரண்டு பேரும் ஒரே பலம் பூண்டவர்களாதலால் யுத்தம் யுகக் கணக்காக நடந்தது. கால் பந்து விளையாட்டு, கிரிக்கட்டு விளையாட்டு, குஸ்திப் பந்தயம் முதலியவற்றை வேடிக்கை பார்ப்பதுபோல் தேவர்கள் இந்தச் சண்டையை வேடிக்கை பார்த்தார்கள்.

காலம் யாருக்காவது காக்கிறதா? ஆகவே யுகம், யுகமாகச் சென்று கொண்டிருந்தது. யுகம் செல்லச் செல்ல, இரண்டு அசுரர்களும் மெள்ள மெள்ள பலஹீனமாகிக்கொண்டே வந்தார்கள். இரண்டு பேர் பலமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்தது. இரண்டு பேர் பலமும் ஒரே அளவில் குறைந்து கொண்டே வந்ததால், வெற்றி தோல்வி யாருக்கு என்று நிச்சயம் ஏற்படாமல் போர் தொடர்ந்து நடந்து கொண்டே வந்தது.

கடைசியில் தற்போதைய கலியுகம் ஆரம்பித்த சமயத்தில் இரண்டு அசுரர்களும் குற்றுயிராய்க் கீழே விழுந்து விட்டார்கள். இன்னும் ஒரு கணமோ, இரண்டு கணமோ, இரண்டு பேரும் ஒரே சமயத்தில் உயிர் துறந்து விடுவார்கள் என்று பட்டது.

இந்தப் பரிதாபகரமான காட்சியைப் பார்த்ததும் தேவர்களுக்கோ கண்ணில் ஜலம் வந்து விட்டது. "இவர்களுக்கு இந்தக் கதி நேர்ந்ததற்கு நாம்தானே காரணம்" என்று தேவர் தலைவன் தம்மைத் தாமே நொந்து கொண்டார். இதற்கு ஏதாவது பரிகாரம் பண்ண வேண்டும் என்று தீர்மானித்து, குற்றுயிராய்க் கிடந்த அசுரர்களை அணுகி, "உங்களுக்கு ஏதாவது வரம் வேண்டுமானால் கேளுங்கள். கொடுக்கிறேன்" என்றார்.

இதற்கு அந்த இரண்டு அசுரர்களும் சேர்ந்தாற்போல் பதில் அளித்தார்கள்.

"தேவர் தலைவா! நாங்கள் இருவரும் எங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருவரோடொருவர் யுத்தம் புரிவதைத் தவிர வேறு ஒரு விஷயத்தையும் அறிந்ததில்லை. ஆகவே நாங்கள் எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் சரி, இதே சமபலத்துடன் வெற்றி தோல்வியின்றி யுத்தம் புரிய அருள் புரிய வேண்டும்" என்று வரம் கேட்டார்கள்.

இதைக் கேட்டுத் தேவர் தலைவன் புன்னகை பூத்தார். தலையைக் கொஞ்சம் சொறிந்தார். பிறகு பின்வருமாறு பதில் அளித்தார்.

"நீங்கள் வேண்டிய வரத்தை இதோ அளித்தேன். நீங்கள் இருவரும் இனிமேல் பூலோகத்தில் ஜன்மம் எடுப்பீர்கள். மாமியாகரன் மாமியாராகவும், மருகாமகரன் மருமகளாகவும் பிறப்பீர்கள். உங்கள் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பீர்கள்."

இந்த வரத்தைத் தேவர் தலைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட அந்த அசுரர்கள் பூலோகத்தில் இப்பொழுது மாமியார், மருமகளாகப் பிறந்து தங்கள் யுத்தத்தை விடாது நடத்திக் கொண்டு வருகிறார்கள்.



முன்னொருகாலத்தில், அதாவது எத்தனையோ யுகங்களுக்கு முன்னால், மாமியாகரன், மருமகாகரன் என்று இரண்டு அசுரர்கள் இருந்தார்கள். இதில் மாமியாகரன் வயதானவன். மருமகாகரன் வயதில் இளையவன். இருந்தும் யுத்தத்தில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல.

வானுலக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தவர்கள் வானுலகத்தில் முதலில் அசுரர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தார்களென்றும், பிறகு அந்த இடத்தைத் தேவர்கள் படையெடுத்தார்களென்றும் கூறுகிறார்கள். தேவர்கள் வானுலகத்தைப் படையெடுத்த சமயத்தில் அசுரர்கள் தங்களுக்குள் மிகவும் பிளவுபட்டிருந்தார்கள் — பிரிட்டிஷார் இந்தியா புகுந்த சமயத்தில் நமது சுதேச மன்னர்கள் பிளவுபட்டிருந்தது போல. இதைத் தேவர்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டு, அசுரர்களைப் 'பிரித்தாண்டு' தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கினார்கள்.

வானுலகத்தில் மெள்ள, மெள்ள ஒவ்வொரு அசுரர்களாக ஒழிந்தார்கள். மெள்ள, மெள்ள ஒவ்வொரு அசுரனுடைய ராஜ்யத்தையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள் தேவர்கள். இப்படியாகச் சில யுகங்களுக்குள் அசுர ராஜ்யமே கிட்டத்தட்ட அழிந்து விட்டது. மாமியாகரன், மருமகாகரன் என்னும் இந்த இரண்டு அசுரர்கள்தான் மீண்டார்கள்.

இந்த இரண்டு அசுரர்களையும் அழித்து, அவர்கள் ராஜ்யத்தையும் பிடுங்கிக் கொள்வதற்குத் தேவர்கள் எத்தனையோ யுக்திகள் கையாண்டு பார்த்தார்கள். இரண்டு பேருக்கும் இந்திரப் பதவி கொடுப்பதாகச் சொன்னார்கள். கந்தர்வ லோகத்து இளம் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள்.

ஆனால் இந்த ஆசைக்கெல்லாம் இணங்கவில்லை இந்த இரண்டு அசுரர்களும். ஏனெனில் பட்டம், பதவி, முதலிய எல்லாவற்றையும் விட இவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது சண்டைதான்; ஒருவரோடு ஒருவர் சண்டை பிடிப்பதுதான்.

இந்த இரண்டு அசுரர்களுக்கும் ஒருவரைக் கண்டால் ஒருவருக்கு ஆகாது. மருமகாகரனைக் கண்டால் வெட்டிக் கொன்றுவிட வேண்டும் போலிருக்கும் மாமியாகரனுக்கு. மாமியாகரனைக் கண்டால் கொன்று புதைத்துவிட வேண்டும்போலிருக்கும் மருமகாகரனுக்கு. இருந்தும் ஒருவருக்கொருவர் பலத்தில் சளைத்தவர்களல்ல. ஆதலால் இரண்டு பேருக்கு மிடையில் எப்பொழுது பார்த்தாலும் யுத்தம் நடந்து கொண்டு இருக்கும். ஒருவரும் யுத்தத்தில் ஜயிக்க மாட்டார்கள். ஒருவரும் யுத்தத்தில் தோற்கமாட்டார்கள்.

இப்படியாகத்தானே எத்தனையோ யுகாந்திரமாக இந்த இரண்டு அசுரர்களுக்கு மிடையில், யுத்தம் நடந்து கொண்டே இருந்தது.

இதைக் கண்டு தேவர்களுக்குப் பயமாகப் போய் விட்டது. ஏனெனில் ஒருவருக்கொருவர் சமமாக உள்ள இரண்டு எதிரிகள், எதிரிகளாக உள்ள வரையில்தான் எதிரிகளாக இருப்பார்கள். இடையே மூன்றாவது எதிரியைப் பார்த்துவிட்டால் முதல் இரண்டு எதிரிகளும் ஒன்று சேர்ந்து விட்டாலும் சேர்ந்து விடுவார்கள் — இப்பொழுது இங்கிலாந்தும், ரஷ்யாவும் ஜெர்மனிக்கு எதிராகச் சேர்ந்திருக்கின்றனவே, அதைப்போல.

ஆகவே இந்த இரண்டு அசுரர்களையும் ஒழிப்பதற்கு என்ன வழி என்று கண்டு பிடிப்பதற்காகத் தேவர்கள் எல்லோரும் சேர்ந்து மகாநாடு கூட்டினார்கள்.

காலக்ஷேபம்

திறந்த காரணம்!

நீதிபதி (குற்றவாளியைப் பார்த்து):—சிற்றுண்டிக்காகவா இரவில் பூட்டை உடைத்து ஓட்டலில் புகுந்தாய்?

குற்றவாளி:—ஆமாங்க. ரொம்ப பசியாக இருந்தது.

நீதிபதி:—பிறகு இரும்புப் பெட்டியை ஏன் திறந்தாய்?

குற்றவாளி:—சிற்றுண்டியின் கிரயத்தைக் கொடுத்து விடலாமென்று தானுங்க!

—ஜி. நரசிம்ம சுப்பிரமணியம்.

★

தந்தை சொற்படி

சீனு:—அப்பா! பென்சில் வேண்டும்.

தகப்பன்:—அதுதான் நேற்று ஒரு புதுப் பென்சில் வாங்கித் தந்தேனேடா?

சீனு:—நேத்திக்குக் காசைக் கொடுத்த போது, "ஒரு பென்சில் வாங்கித் தொலை" என்றுதானே சொன்னாய்?

—டி. ஆர். சிவசாமி.

★

அதிர்ஷ்டசாலி!

ஒருவன் (மோட்டார் விபத்தில் காயம்பட்டவரைப் பார்த்து):—நீர் அதிர்ஷ்டசாலி ஐயா, டாக்டர் வீட்டு வாசலிலேயே உமக்கு அபாயம் நேர்ந்தது.

காயம் பட்டவர்:—நான்தான் ஐயா அந்த டாக்டர்.

—சேதுமாதா.

★

கொடுத்து வைத்தது

கிட்டு:—ராமு இன்று காலை ஐந்து ரூபாயைத் தொலைத்து விட்டானாமே!

மூர்த்தி:—நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

கிட்டு:—அதற்கு நீ ஏன் அவ்வளவு கவலைப் படுகிறாய்?

மூர்த்தி:—அந்த ரூபாயை நான்தான் இன்று காலை கோபுவிடம் கடனாக வாங்கி அவனிடம் கொடுத்து வைத்திருந்தேன்.

—எம். சுப்பையா.

★

வேண்டாத விஷயம்

பிச்சைக்காரன்:—அம்மா! ஏதாவது உங்களுக்கு வேண்டாததை இப்படி விட்டெறியுங்க.

வீட்டுக்காரி:—சரி, கொஞ்சம் கழித்து வா. என் மாமியார் ஊருக்குப் போயிருக்காங்க, வரட்டும்.

—பி. என். சங்கரன்.

ஒரே விலைதான்

பையன்:—இந்தத் துணி கஜம் என்ன விலை?

வியாபாரி:—பத்தணா.

பையன்:—ஒரு பீசாக வாங்கினால்?

வியாபாரி:—அதற்கும் அதே விலைதான்.

பையன் (பத்தணாவைக் கொடுத்து):—அப்படின்னா ஒரு பீசாகவே கொடுத்துடு!

—என். இ. யு. ஷெரீப்.

★

என்ன விலை?

வியாபாரி:—இவைகள் நல்ல மோட்டார்களாய் இருப்பதால்தான் டஜன் கணக்கில் விற்பனை ஆகின்றன.

வந்தவர்:—ஓஹோ! டஜன் என்ன விலை?

—ராமு.

★

நாகரிக வேட்டை

பெண் பார்க்க வந்தவர் (நாகர் காதில் ரகசியமாக):—இந்தப் பெண்ணுக்கு ஏகப்பட்ட புடவைகளும், நகைகளும் இருக்கிறதே, எல்லாம் சொந்தமா?

நாகர்:—உங்களுக்கு அதைப்பற்றிச் சந்தேகம் வேண்டியதில்லை. எல்லாம் சொந்தந்தான். இல்லாவிட்டால் இந்தத் தரித்திரங்களை நம்பி யார் இரவல் கொடுக்கப் போகிறார்கள்?

—டி. எம். குருசாமி.

★

தெரியாத விஷயம்

எஜமான்:—ஏண்டா, நான் எவ்வளவு தடவை சொன்னேன் தெரியுமா, வேலைக்குச் சீக்கிரம் வா என்று?

வேலைக்காரன்:—தெரியாதுங்க சாமி!

எஜமான்:—என்னடா தெரியாது?

வேலைக்காரன்:—நீங்கள் எவ்வளவு தரம் சொன்னீங்கன்னு எனக்குத் தெரியாதுங்க.

—என். எச்.

★

பாகிஸ்தான் விஷயம்!

"ஏன் ஸார், இந்தப் பாகிஸ்தான் சம்பந்தமாகப் பத்திரிகையில் ஏதேனும் செய்தி வந்திருக்கோ?"



"வேண்டியது வந்திருக்கு; கொஞ்சம் இருங்கோ. அந்தச் செய்தி வந்திருக்கிற பக்கத்தை உங்களுக்கு அப்படியே 'பாகிஸ்தான்' பண்ணிக் கொடுத்துடறேன்!"

—கே. ஆர். கே.



பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி, கேசவர்த்தினியைக் கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க் கட்டையையும் மாற்ற முடியாது. ஆனால் கூந்தலையோ விதவிதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர், கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கருத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகு படுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை

மயிலாப்பூர்



IT WORKS LIKE A MAGIC WAND ON THE SKIN IF USED REGULARLY AFTER BATH AND BEFORE GOING OUT FOR A WALK. MAKES THE SKIN SOFT AND DELICATE & IS SWEETLY FRAGRANT. IT IS VERY POPULAR AMONGST MODERN LADIES & THEIR CHILDREN. TRY ONCE AND BE CONVINCED OF IT'S MAGIC EFFECTS.

AVAILABLE AT EVERY BIG STORE OR CHEMIST.

Mfd by:

THE NATIONAL TRADING CO.,
MANGALDAS Rd. BOMBAY, 2. TELE 33000

மதராஸ் ஏஜண்டுகள்:

B. C. ராமலிங்கம் & ஸன்.,
21/422, தங்கசாலைத் தெரு, மதராஸ்


ரோஜா மார்க் நெய்

ROSE BRAND PURE GHEE
LINGAM & Co COIMBATORE

எல்லா கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும் கிடைக்கும். அவர்களிடம் இல்லாவிடில் ஸ்டாக் செய்யச் சொல்லி சப்ளை செய்யும்படி தூண்டுங்கள். நம்பகமான வியாபாரிகளிடமே வாங்குங்கள். கிடைக்காத பக்ஷத்தில் 3 வீசை கொண்ட டின்னுக்கு எங்களுக்கே நேரிட ஆர்டர் செய்யுங்கள்.

லிங்கம் & கோ.,

கோயமுத்தூர்.



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

82. இதோ ஒரு கை பார்க்கிறேன்

தாய்மார் முனிவர்கள் மந்திரிமார் எல்லாரையும் சேர்த்துக் கொண்டு ராமனைத் தேடப் புறப்பட்டான் பரதன். மார்க்கத்தில் குகனையும் சேர்த்துக் கொண்டான். கடைசியாக பரத்துவாஜ ஆசிரமத்தில் வந்து எல்லாரும் தங்குகிறார்கள்.

எல்லாருக்குமே அங்கே ஒரு அமைதி; பரதனுக்குங் கூட, ராமன் இருக்கும் இடத்தைக் கிட்டியாகி விட்டது என்ற எண்ணத்தில். பரதனையும் பரிவாரங்களையும் முனிவர் ஆசிரமத்தில் விட்டு விட்டுச் சித்திரகூட பர்வதத்துக்கு நாம் போகிறோம்.

அங்கே ராமன் சீதை லக்ஷ்மணன் ஆகிய மூவரும் வசித்து வருகிறார்கள். ஒருநாள் லக்ஷ்மணன் தான் கட்டிய பர்ண சாலையின் முற்றத்தில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். மலைக் காட்சிகளைப் பார்த்து அநுபவித்துக் கொண்டிருக்கிறான். அந்த வேளையில் வடக்குத் திக்கில் ஏதோ தூசிப் படலம் எழுவதாகப் புலப்பட்டது. பக்கத்தில் கோபுரம் போல் உச்சி கூடிய ஒரு பாறை இருந்தது. அந்த உச்சியின் மேல் ஏறினான்.

எழுந்தனன் இளையவன்
 ஏறி னன்நிலம்
கொழுந்துவிட்(டு) அனையதோர்
 நெடிய குன்றின்மேல்,—
செழுந்திரைப் பரவையைச்
 சிறுமை பேசிய
கழுந்துடை வரிசிலைக்
 கடலை நோக்கினான்.

[எழுந்தனன் இளையவன்: எழுந்தான் லக்ஷ்மணன்; நிலம் கொழுந்துவிட்டனைய தோர் நெடிய குன்றின்மேல்: தனித்து உயர்ந்து நின்ற பாறையானது நிலமே கொழுந்து விட்டு நின்ற மாதிரி இருந்தது; செழுந்திரைப் பரவையைச் சிறுமை பேசிய: பெரிய பெரிய அலைகளைக் கொண்ட சமுத்திரத்தையே சாமான்யம் என்று சொல்லும் படியாக அத்தனை பெரிய சேனை சமுத்திரம்; கழுந்துடை வரிசிலை: வயிரம் ஏறி நரம்பு கட்டிய தண்டோடு கூடிய வில்.]

சேனையோடு பரதன் வருவதைப் பார்த்தானோ இல்லையோ, குன்றின் உச்சியிலிருந்து முற்றத்தில் குதித்தான். கோப வெறியில் நிலத்தை அப்படியும் இப்படியுமாக மிதித்தான். ஒரே வேகமாக ராமனிடம் ஓடினான்.

குதித்தனன் பாரிடைக்
 குவடு நீ(று)எழ
மிதித்தனன், இராமனை
 விரையின் எய்தினான்;

'மதித்திலன் பரதன், நின்
மேல்வந் தான், மதிற்
பதிப்பெருஞ் சேனையின்
பரப்பி னான்' என்றான்.

[குவடு நீறுஎழ மிதித்தனன்: மலைச்சிகரமானது முற்றும் தூசி எழும்படியாக மிதித்தான்; மதித்திலன் பரதன்: உன்னுடைய தாராள குணத்தைக் கொஞ்சங்கூட மதிக்கவில்லை அந்த பரதன்; மதில் பதிப்பெருஞ் சேனையின் பரப்பினன்: உயர்ந்த கோட்டைச் சுவர்களால் காக்கப்பட்ட அயோத்தியிலுள்ள அத்தனை சேனையையும் இங்கே கொண்டு வந்து விட்டான். குறிப்பு :—லக்ஷ்மணன் பூமியை மிதிக்கிற சத்தம் செய்யுளின் ஓசையிலேயே கேட்கிறது.]

இந்தச் செய்தியைச் சொல்லி விட்டுச் சும்மா நிற்கிறபேர்வழியா லக்ஷ்மணன்?

கட்டினன் கரிகையும்
கழலும், பல்கணைப்
புட்டிலும் பொருத்தனன்
கவசம் பூட்டமைத்(து)—
இட்டனன், எடுத்தனன்
வரிவில், ஏந்தலைத்
தொட்(டு)அடி வணங்கிநின்(று)
இனைய சொல்லினான்.

[கட்டினன் கரிகையும் கழலும்: வாளையும் வீரக்கழலையும் கட்டிக் கொள்ளுகிறான்; பல்கணைப் புட்டிலும் பொருத்தனன்: பல அம்புகளைக் கொண்ட அம்பறாத் தூணியையும் தோளில் கட்டிக் கொண்டான்; கவசத்தை மாட்டிக் கொண்டான், வில்லையும் எடுத்துக் கொண்டான். பிறகு என்ன செய்தான்—ராமனது பாதத்தைத் தொட்டு நின்று வணங்கிப் பேசுகிறான்; ஏந்தல்; ராமன்; அடி: பாதங்கள்!]

சாமான்ய உடையிலேயே லக்ஷ்மணனுக்கு வேண்டிய கோபம் வரும். யுத்த சின்னங்களை அணிந்து விட்டால் ஒன்றுக்குப் பத்தாய்த்தானே வரும்?

'இருமையும் இழந்தஅப்
பரதன் ஏந்துதோள்ப்
பருமையும், மன்னவன்
படைத்த சேனையின்
பெருமையும், நின்னொடு
பின்பு வந்தனன்
ஒருமையும், கண்(டு) இனி
உவத்தி உள்ளம் நீ.'

[இருமையும் இழந்த அப்பரதன்: இந்த அயோக்கிய பரதனுக்கு இம்மையில் சுகம் கிடையாது; மோக்ஷம் வேறு? ஏந்துதோள் பருமையும்: பரதனுடைய தோள் நின்று கொழுத்துப் பருமையாக இருக்கிறதினும் குறைச்சலில்லை; மன்னவன் படைத்த சேனையின் பெருமையும்: தசரதன் ஏதோ பெரிய சேனையைத் திரட்டி வைத்திருந்தான்; அதன் பெருமையும் இவ்வளவுதான் என்று பார்க்கப் போகிறாய். இவ்வளவுக்கும் ஈடு கொடுக்க ஆள் இல்லை என்று எண்ணி விடாதே. நான் தனியாக இருந்தே செய்கிற செயலைப்பார்.]

கோபாவேசம் என்ன குரலோடு பேசுகிறது என்பதைப் பார்க்கிறோம். "நான் ஒருவன் தான்; ஆனால் ஒரு வில் இருக்கிறது; அம்புக் கட்டும் வேண்டிய மட்டும் இருக்கிறது. வந்தவர்கள் எல்லாரும் தொம்சமாகி விடுவார்கள். என்னுடைய திறமையைக் காட்ட இதுவரை சந்தர்ப்பமில்லை. நீ அபாரமாய்ச் சந்தோஷம் கொள்ளப் போகிறாய்" என்று லக்ஷ்மணனது மனசிலுள்ள உண்மையான உணர்ச்சி, எப்படியோ செய்யுள் உருவமாக மாறுகிறது.



இதற்குள்ளே இறந்து விட்டாரோ என்னவோ என்று கத்திக்கொண்டே கடற்கரைக்குஓடினேன்.

அங்கேயும் விசுவநாதனைக் காணோம். மணி இரண்டு இருக்கும். சமுத்திரக் கரையில் ஜன நடமாட்டமே இல்லை. ஒன்றிரண்டு செம்படவர்கள் மட்டும் தங்கள் வலைகளைச் செப்பனிட்டுக்கொண்டிருந்தார்கள்.

"ஐயா, இங்கே என்னைப் போல வாலிபன் ஒருவன் வந்தானா?" என்று ஒருவனைக் கேட்டேன்.



தபால்காரன் :—என்ன சாமி! தீபாவளி இனாம் கிடையாதுங்களா? உங்களுக்காக எத்தனை பார்ஸல் கஷ்டப்பட்டுத் தூக்கிக்கொண்டுவந்திருக்கிறேன்?

வீட்டுக்காரர் :—உன்னை யாரப்பா கஷ்டப்படச் சொன்னது? தபாலில் போட்டால் தன்னைப் போல் வந்து சேர்கிறது!

—ஏ. கங்கா.

"எத்தனையோ பேர் வருகிறார்கள், போகிறார்கள். நாங்கள் என்னத்திற்கு அவர்களைக் கவனிக்கிறோம்?" என்று அவன் பதில் சொல்லி விட்டான்.

மறுபடியும் அங்கு மிங்கும் பார்த்தேன். விசுவநாதனைக் காணவில்லை. கடைசியில் நாங்கள் மாலை நேரத்தில் வழக்கமாக உட்காரும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அப்படியே மணலின்மேல் சோர்ந்து உட்கார்ந்து பக்கத்திலிருந்த ஒரு தோணியின்மேல் சாய்ந்தேன்.

★

இருள் பரவ ஆரம்பித்தது. பௌர்ணமிக்கு அடுத்த நாளாகையால் சூரியன் மறைந்ததும் இருட்டு எங்கிருந்தோ வந்துவிட்டது. கடற்கரையில் கூடியவர்கள் தங்கள் இல்லம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். எனக்கு ஹாஸ்டலுக்குப் போக இஷ்டமில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

அதே சமயத்தில் சரோஜா வேகமாக அங்கு வந்து சேர்ந்தாள்.

"ஏன் தனியாக இருக்கிறீர்கள்?"

"சரோஜா, அவனை மத்தியானத்திலிருந்து காணவில்லை. நான் இங்கேயே காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று நடந்ததெல்லாம் ஒன்று விடாமல் கூறினேன்.

"நான் சொன்னதை எல்லாம் அவரிடம் கூறினீர்களா?"

"ஆமாம், அப்படியே சொன்னேன்."

"ஐயோ, எனக்குத் துரோகம் செய்து விட்டீர்களே" என்று அவள் கதற ஆரம்பித்தாள்.

"சரோஜா, நான் ஒன்றும் பொய் சொல்லவில்லையே. நீ சொன்னதைத் தானே சொன்னேன்?"

"உங்களுக்கு ஏதாவது காதலின் போக்குத் தெரிந்திருந்தால் அப்படிச் சொல்லுவீர்களா? நான் சொன்னதெல்லாம் உண்மையென்று எப்படி நீங்கள் நினைக்கலாம்?"

இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

"அவரைப் பிரிந்து ஒரே ஒரு நிமிஷம் கூட நான் உயிருடன் இருக்க மாட்டேன். நானும் அவரோடேயே இந்தக் கடலில் விழுந்து விடுகிறேன். அவரில்லாமல் எனக்கு இந்த வாழ்க்கை எதற்கு?" என்று அவள் எழுந்தாள்.

நான் தடுக்க முயன்றேன். அந்தச் சமயத்தில் தோணிக் குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

"சரோஜா, கண்மணி! விழுந்து விடாதே. இதோ நான் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே விசுவநாதன் குதித்தான்.

"ஆ! இருக்கிறீர்களா? உங்கள் இஷ்டம் போலவே கலியாணத்தை இந்த மாதமே வைத்துக் கொள்ளுவோம்" என்றாள் சரோஜா.

நான் கடலைப் பார்த்துக்கொண்டு ஒதுங்கி நின்றேன்.

தொடுவானம் கடலின் விளிம்பை முத்த மிட்டுக் கொண்டிருந்தது. மெதுவாக மேலெழுகின்ற நிலாவை ஒரு வெண் மேகம் தன்னுள் அணைத்துக் கொண்டிருந்தது.

மறுபடியும் நான் திரும்பிப் பார்த்தபோது சரோஜாவும் விசுவநாதனும் ஆறு கஜ தூரத்துக்கு அப்பால் போய் விட்டார்கள். நான் ஒருத்தன் இருப்பதே அவர்களுக்கு நினைவில்லை. காதலின் போக்கே அப்படித்தானோ என்னவோ, எனக்கு எப்படித் தெரியும்?

"பின் எதற்காக இரண்டு மாதம் பொறுக்கச் சொல்லுகிறாய்?"

"நானா சொல்லுகிறேன்? அவள் தானே சொல்லுகிறாள்?"

"அவளுக்கு உண்மையான காதல் என் மேல் இருந்தால் அப்படிச் சொல்லியிருப்பாளா? இதிலிருந்து அவளுக்கு என்மேல் ஆழ்ந்த அன்பு இல்லையென்று தெரிந்து விட்டது. அதனால்தான் இரண்டு மாதம் பொறு என்கிறாள்."

"உன் மேல் அன்பில்லாமல் அப்படிச் சொல்வதாக எனக்குப் படவில்லை. உனது பரீக்ஷைக்கு இடைஞ்சலாக இருக்கப் படாது என்றுதான் அவள் இரண்டு மாதம் பொறுக்கத் தயாராக இருக்கிறாள். அதுவே உண்மையான காதல் என்றுதான் நான் நினைக்கிறேன்."

"உனது நினைப்பைக் கொண்டு போய்க் குப்பைத் தொட்டியில் போடு. காதலை அறியாத உனக்கு என் மன வேதனை எப்படித் தெரியப் போகிறது?"

இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போதே அவன் குரலில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கோபம் மறைந்து துக்கம் மேலோங்க ஆரம்பித்தது. அவன் என்னைக் கனிந்த உள்ளத்தோடு பார்த்து, "அன்பா, இதுதான் உன்னை நான் பார்ப்பது கடைசித் தடவை. நான் உன்னை நினைத்துக் கொண்டே கடலில் விழப் போகிறேன். நீ எப்பொழுதாவது ஒரு பெண்ணைக் காதலிப்பாயானால் அப்பொழுது எனது செய்கையைப் பற்றிச் சரிவர அறிந்து கொள்ளுவாய். ஆனால் உனக்கும் என் கதி நேரக்கூடாது என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அவன் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருந்தது. நானும் வாய் விட்டுக் கதறி விட்டேன். அவன் திரும்பிப் பார்த்தான்.

"விசு, கொஞ்ச நேரம் இங்கேயே பொறுமையாக இரு. நான் இப்பொழுதே போய்ச் சரோஜாவைக் கண்டு எல்லாம் தெரிவித்து வருகிறேன். அவள் நிச்சயம் உன் இஷ்டப்படியே நடப்பாள்" என்று கூறி அவனை என் அறையிலேயே இருக்கச் செய்து விட்டு நேராகத் திருவல்லிக்கேணியிலுள்ள அவளுடைய வீட்டுக்குப் போனேன்.

ஹாஸ்டலிலிருந்து அவள் வீடு பக்கந்தான். அவளைப் பார்க்கும் வரையில் எனக்கு ஒரே நம்பிக்கை. பி.ஏ. முதல் வகுப்பில் வாசிக்கும் அவள் இந்த நெருக்கடியான நிலைமையை உணராது போய் விடுவாளா என்ன?

ஆனால் எனது நம்பிக்கை வீணாய் விட்டது. அவள் ஒரே பிடிவாதமாயிருந்தாள்.

"அவரை நான் மணந்து கொள்ள முடியவே முடியாது. நினைத்ததற்கெல்லாம் பிராணனைவிட்டு விடுவதாகப் பயமுறுத்துபவரைக் கலியாணம் செய்து கொண்டு வாழ்க்கை முழுவதும் யார் அவஸ்தைப் படுவது?" என்று முடிவாகச் சொல்லி விட்டாள்.

விசுவநாதனுக்கு விஷயத்தை மறைத்து மறைத்துப் பதில் சொல்லுவது கஷ்டமாய் விட்டது. ஆகவே, அவனிடம் வகையில்லாமல் உண்மையை உளறி விட்டேன்.

"ஆகா அப்படியா சொன்னாள்? நான் சும்மா பயம் காட்டுகிறேன் என்றுதானே அவள் நினைப்பு? இதோ பார், நான் நேராகச் சமுத்திரத்தில் போய் விழுந்து விடுகிறேன்" என்று எழுந்து அவன் ஓட ஆரம்பித்தான்.

நான் தடுத்தேன். "டேய், காதல் என்பதே தெரியாத நீ என்னைத் தொடக்கூட லாயக்கில்லை" என்று சொல்லி எதிர்பாராத விதமாக என் முகத்தில் ஒரு குத்துவிட்டான்.

அப்படியே மயங்கி விழுந்து விட்டேன். உணர்வு வந்து நான் எழுந்த போது அங்கு விசுவநாதனைக் காணோம்.





காதல் வழி

— பெ. தூரன் —

எனது நண்பன் விசுவநாதன் அடிக்கடி என்னிடம் சொல்லுவான்: "ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஒரு தடவையாவது இந்த உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது" என்று. மற்றவர்களுடைய வாழ்வில் அப்படி உண்டாகிறதோ என்னவோ, அவனைப் பொருத்தமட்டில் இது உண்மைதான். ஒரு தடவையல்ல, பல தடவைகளில் அவன் உயிரைப் போக்கிக் கொள்ளப் போவதாக என்னிடம் கூறியிருக்கிறான்.

நாங்கள் ஹாஸ்டலில் பக்கம் பக்கமாக உள்ள இரு அறைகளிலிருந்தோம். ஒரு நாள் திடீரென்று அவன் என்னிடம் ஓடிவந்து, "இனிமேல் நான் இந்தப் பிராணனை வைத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. தகப்பனாருக்குச் சரோஜாவைப் பிடிக்க வில்லையாம். அதனால் நான் அவளைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டாராம்" என்றான்.

"அதற்காக நீ உயிரை விட்டுவிட்டால் அவர் சம்மதித்து விடுவாராக்கும்?"

"காதலின் போக்கு இன்னதென்றே தெரியாத நீ இப்படித்தான் பேசுவாய்" என்று சீறிவிட்டு அவன் வெளிக் கிளம்பினான்.

மறு நாள் காலை இரண்டாம் தடவையாக, அவன் சமுத்திரத்தில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் போவதாகச் சொன்ன போது, எனக்கு உண்மையிலேயே பயம் உண்டாய் விட்டது. இந்தத் தடவை அவன் வார்த்தையை லேசாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் முகத்தில் என்றுமில்லாத ஒரு உறுதி குடிகொண்டிருந்தது. ஏனென்றால் இப்பொழுது விஷயம் ரொம்பப் பெரியதாய்ப் போய் விட்டது. சரோஜாவை அவன் கலியாணம் செய்து கொள்வதை முன்னெல்லாம் பெற்றோர்களும், பந்துக்களுமே ஆக்ஷேபித்தார்கள். அவை யெல்லாம் ஒருவாறு தீர்ந்து போய் அவன் ஆவலோடு திருமணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் சரோஜாவே அவனைக் கலியாணம் செய்து கொள்ள மறுத்து விட்டாள். திடீரென்று என்னவோ கோபம்.

விசுவநாதனின் இன்பக் கனவெல்லாம் இப்படி ஒரு க்ஷணத்தில் மறைந்து போய்விட்டது. ஆனால் அவனுக்கு வாழ்க்கையில் உண்மையாகவே வெறுப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆகையினாலேதான் நான் இந்தத் தடவை பயப்படவேண்டியதாயிற்று.

"ஏன் திடீரென்று இப்படி மனமாறுதல் ஏற்பட்டது? நடந்த விஷயம் என்ன?" என்று நான் அவனை மெதுவாகக் கேட்டேன்.

"கலியாணத்தை அடுத்த மாதத்திலேயே வைத்துக் கொள்ளலாமென்று நான் சொன்னேன். அவள் கோடை விடுமுறையில் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரே பிடிவாதம் செய்தாள்."

"சரி, சரி, அதற்காக அவளிடம் சண்டை போட்டுக் கொண்டாயாக்கும். கோடை விடுமுறையில் வைத்துக் கொண்டால் நல்லதுதானே? நீயும் பரீக்ஷை எழுதிவிடுவாய். பரீக்ஷைக்கு முன்னால் கலியாணத்தை வைத்துக் கொண்டால் படிப்புக்கு இடைஞ்சல்தானே?"

"அதெல்லாம் எனக்கும் தெரியும். உங்களுடைய யோசனை எனக்கு வேண்டியதில்லை" என்று அவன் உறுமினான்.

"அடடே! கோபித்துக் கொள்ளாதே. இரண்டு பக்கத்திலும் பெற்றோர்களுடைய சம்மதமோ கிடைத்து விட்டது. பிறகு அவசரம் என்ன? ஒரு இரண்டு மாதம் தாமதிக்கப்படாதா என்றுதான் நினைத்தேன்."

"உனக்கு என்ன தெரியும்? நீ அப்படித்தான் நினைப்பாய். காதலின் போக்கை அறியாத நீ வேறு எப்படி நினைப்பாய்?"

"காதலைப் பற்றித்தான் எனக்குத் தெரியாதென்று எத்தனையோ தடவை ஒத்துக் கொண்டிருக்கிறேனே, மறுபடியும் மறுபடியும் என் என்னை இப்படி இடித்துக் காண்பிக்கிறாய்?"

நீங்கள் முதலீடுசெய்ய சிறந்த வழி

விக்டரிலோன் நல்ல வட்டி தருகிறது

எப்பொழுதும் பாதுகாப்புள்ளது
எப்பொழுதும் விற்கப்படக்கூடியது

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள் பூரண அளவுக்கும் வாங்கிய பிறகும் உள்ள உபரித் தொகையை பந்தோபஸ்தாய்ப் போட்டுவைக்க விரும்புகிறவர்கள் 100க்கு 3 வட்டி விக்டரிலோன் பத்திரங்களை வாங்கவேண்டும். இதற்கு இந்தியாவின் செல்வம் ஆதாரமாகும். அரசாங்கம் இதற்கு ஜாமீன். 1957ம் வருஷம் செப்டம்பர் 1ல் இந்தக் கடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

உங்கள் பணம் உங்களுக்குத் தேவையாயிருந்தால் 1957ம் வரு வரைக் காத்திருக்கவேண்டியதில்லை. விக்டரிலோன் எந்தக்காலத்திலும் எளிதில் விலையாகக் கூடியது.

உயர்ந்த விலைவாசிகளைக் குறைக்க உதவுங்கள். விக்டரி லோனில் எவ்வளவு அதிகமாகப் பணம் போடப்படுகிறதோ, அவ்வளவிற்கு விலைவாசிகள் குறையும். இப்படிப் பணத்தைப் போட்டுவைப்பது விலைவாசிகளைக் குறைக்க உதவுகிறது. உங்கள் பணத்தைக் கொண்டு யுத்தத்திற்குப் பிறகு அதிகப் பொருள்களை வாங்கலாம்.

இந்த லோன் சம்பந்தமான சில உண்மைகள்

1. அசல் தொகைக்கே கடன் பத்திரங்கள் விற்கப்பட்டு 1957ம் வரு. செப்டம்பர் 1ல தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.
2. மறு அறிக்கைவரை கடன் பத்திரங்கள் விற்கப்படும்.
3. அரை வருஷத்திற்கு ஒரு முறை மார்ச்சு மாதம் 1ம் தேதியும் செப்டம்பர் மாதம் 1ம் தேதியும் வட்டிகொடுக்கப்படும்.
4. வாங்குவது எளிது. உங்கள் பாங்கர்களுக்காவது, பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி, கான்பூர் ஆகிய ஊர்களிலுள்ள இந்திய ரிஸர்வ் பாங்கிகளுக்காவது மற்ற ஊர்களிலுள்ள இம்பீரியல் பாங்கிகளுக்காவது அரசாங்க கஜானாக்களுக்காவது மனுச் செய்துகொள்ளுங்கள்.

செலவைக் குறைத்து சேமிப்பைப் பெருக்கி

1957-ம் வருஷத்திய 100க்கு 3 வட்டி

விக்டரிலோன்

பத்திரங்களை வாங்குங்கள்

இந்திய அரசாங்க நிதி இலாகா வெளியிட்டது

AAA 1159 TM

அதற்கும் 'ஊம்'தான்! — இதை விட ஆவலுள்ள வரவேற்பு எனக்குக் கிடைக்காதென்று தெரிந்து விட்டது.

சங்கரி என்னைத் தாண்டிப் போய் விட்டாள். அவர் கண்களை மூடிச் சிந்தித்தபடி இருந்தார்.

சங்கரி என் கையில் கொடுத்திருந்த புஷ்பம் அவர் காலடியில் விழுந்தது. என் இரு கைகளாலும் அவர் கால்களை பிடித்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதேன். அன்று என் கையைப் பிடித்திருந்த கைகளை உதறித் தள்ளினேன். இன்று அவருடைய பாதங்களில் என் முகத்தைப் புதைத்துக் கொண்டேன்.

"என்ன, லீதா! ஏன் இப்படி அழுகிறாய்? உனக்கென்ன? சொல்லேன்" என்றார்.

நான் சொல்ல வேண்டுமென்று எண்ணிக் கற்பனை செய்து வைத்திருந்த வார்த்தைகளில் ஒன்றேனும் தொண்டையை விட்டு வெளியே வரவில்லை. என் மனதில் குமுறிக் கொண்டிருந்த துக்கம் வெளியேற விம்மி விம்மி அழுது தீர்த்துவிட்டேன்.

அவர் என்னை உதாசீனம் செய்யாமல் பிரியத்தோடு பக்கத்தில் இருத்திக் கொண்டார். திரும்பவும் அதே கேள்வி! "சொல்லு, உனக்கென்ன செய்கிறது?"

அவர் கேட்டதற்கு ஏதேனும் பதில் சொல்ல வேண்டுமே! அசடு வழிய அந்தச் சமயத்தில் வாயில் வந்ததைக் கேட்டு வைத்தேன்.

"நீங்கள் என்றைக்கேனும் ஜயாவின் புருஷரைப்போல் என்னைக் கோபித்து அடிப்பீர்களா?"

இதைக்கேட்டு அவர் சிரித்து விட்டார். "அட அசடே, இதற்கா இவ்வளவு அழுகை? நான் பயந்தே விட்டேன். இதோ பார், நான் சத்தியமாக ஒரு நாளும் அவனைப்போல் நடந்துகொள்ள மாட்டேன். எங்கே, இப்பொழுது சிரி" என்று என் முகத்தை நிமிர்த்தினார்.

என் மனதிலிருந்த பளு வெல்லாம் இறங்கிவிட்டது. என்னைப் பற்றி நினைத்த பொழுது எனக்குச் சிரிப்புத் தான் வந்தது. நான் அசடுதான், வடிகட்டின அசடு என்று எண்ணினேன். என்னால் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. என் கண்களை இறுக மூடிக் கொண்டேன். இப்பொழுது நான் ஒரு தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் நான் அவர் எதிரில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்ததைக் கண்ட அத்தை சிரித்துக் கொண்டே, "என்னடாப்பா! எந்த மாயப் பொடியைப் போட்டு மயக்கினே, அவளை?" என்று கேட்ட பொழுது, வெட்கத்தினால் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டேன்.

ஆகாசவெடி

"பர்மா கைப்பற்றப் பட்டபோது, விதைக்காக பெயர்பெற்ற பர்மா நெல்லில் 500 மூட்டையை நமது சர்க்கார் கையோடு கொண்டு வந்து விட்டனர்."

—ஒரு செய்தி.

அந்த 500 மூட்டை நெல்லையும் பர்மாவிலேயே கொண்டு போய் விதைக்கும்படியான நிலைமையை சீக்கிரமே ஏற்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

★

"வங்காளத்தில் வெளுக்கும் கூலி அதிகமாகிக் கொண்டே போவதால் நூறு துணிகளை வெளுப்பதற்கு ரூ. 6-4-0 என்று வண்ணான் கூலியை நிர்ணயம் செய்து விட்டார்கள்."

—ஒரு செய்தி.

இதனால் சலவைத் தொழிலாளிகள் தங்கள் கோபத்தைத் துணிகளிடம் காண்பிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

★

"இரண்டாவது பிரிட்டிஷ் சேனை பெல்ட் என்ற ஜெர்மன் கோட்டையைப் பிடித்துக் கொண்டது."

—யுத்தச் செய்தி.

பிரிட்டிஷ் சேனையின் சாமர்த்தியத்தை பெல்ட் (உயர்ந்தது) என்று அவர்கள் பாஷையாலேயே புகழ்கிறோம்!

★

"திரிந்துபோன பாலைப் பவுடராகச் செய்து 1000 டன் பவுடரை இந்திய சர்க்கார் இறக்குமதி செய்திருக்கிறார்கள்."

—ஒரு செய்தி.


போகட்டும்; திரிக்கப்பட்ட செய்திகளை இறக்குமதி செய்யாமலிருந்தால் க்ஷேமந்தான்!

★

"நவம்பர் முதல் தேதியிலிருந்து ஜப்பானியப் பத்திரிகைகள் இரண்டு பக்கங்களே வெளிவரும்."

—ஒரு செய்தி.

இரண்டு பக்கத்தையும் நன்றாக யோசித்துப் பார்த்தே அத்தகைய நல்ல முடிவுக்கு வந்திருக்கவேண்டும்.



அவர்கள் சாப்பிடும் போது மெல்ல எட்டிப் பார்த்தேன்.

என் மனம் தவித்தது. அறையில் மாட்டியிருந்த அவர் படத்துக்கு எதிரில் கைகூப்பிக்கொண்டு என் தவறுக்காக வருந்தினேன். ஒன்றிலும் சாந்தி ஏற்படவில்லை. வேதனை தாங்காமல் அழுகை தான் வந்தது.

அதற்கு அவள் புருஷர், "அப்படி நாலு பேருக் கெதிரில் கச்சேரி செய்து மினுக்கிக் குலுக்க ஆசைப்படுகிறவளுக்குக் கலியாண மெதற்கு? எல்லாம் என் தலையெழுத்து!" என்றார்.

அப்பா! அந்தக் குரலின் கொடூரத்தைக் கேட்டு என் உடல் பதறிவிட்டது. அதற்குமேல் என்னால் அங்கே நிற்க முடியவில்லை.

"அண்ணா! பாவம், ஜயாவை என்ன பாடு படுத்துகிறார் உன் சிநேகிதர்?" என்றாள் சங்கரி.

"பார்ப்பதற்கு நன்றாயிருக்கிறாரே தவிர, மகா மூர்க்கன்!" என்றார் அவர்.

"கிளியை வளர்த்துப் பூனையின் கையில் கொடுத்தது போலிருக்கு" என்று அத்தை அனுதாபப் பட்டாள்.

என் மனம் சொல்ல முடியாத வேதனை அடைந்தது. ஜயாவைப் பற்றிய என் கற்பனைகள் எங்கோ சிதறி ஓடிவிட்டன.

அப்பப்பா! அந்த இரண்டு நாட்களும் இரண்டு யுகங்கள்தான். என் மனதில் அழுந்திக் கிடந்த இருள் எங்கோ விலகிப் போய்விட்டது. புது ஒளியின் சக்தி என்னைத் திணற வைத்து விட்டது. நான் இங்கு வந்த நாளாய் எவ்வளவு தவறு செய்திருக்கிறேன்? நினைப்பதற்கே வெட்கமாயிருந்தது. ஒன்றிற்கேனும் அவர் என்னைக் கோபித்திருப்பாரா?

நான் செய்த தவறுக்குப் பிராயச் சித்தம் என்னவென்று தெரியாமல்

மாலை வேளையில் அவர் வருவதற்குச் சற்றுமுன் வீணையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். அவர் வந்த பின்பும் நிறுத்தவில்லை. ஆனால் அவர் என் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

கையில் மல்லிகைப் புஷ்பத்துடன், "இந்தா, மன்னி!" என்றாள் சங்கரி.

"இது ஏது?" என்றேன்.

"அண்ணா கொடுத்தார்."

"உன் அண்ணா இப்பொழுது எங்கே இருக்கிறார்?"

"மேல் மாடியில்!" என்றாள்.

"அவரிடம் நான் அங்கு வரலாமா என்று கேள்" என்றேன்.

சங்கரி சென்றதும் நானும் அவளறியாமல் பின் சென்றேன்.

பகலிலேயே என்னுடைய தவறையெல்லாம் அவரிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டு விடுவதென்று தீர்மானித்து வைத்திருந்தேன். ஆகையால்தான் அவ்வளவு தைரியமாய் அவர் இருப்பிடம் சென்றேன்.

அவர் கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்தார். சங்கரி, "அண்ணா! மன்னி சும்மா அழுது கொண்டே இருக்கிறாள்" என்றாள். அதற்கு, "ஊம்" என்றார் அவர்.

"அவளை இங்கே வரச் சொல்லட்டுமா, அண்ணா?"

பற்றி என் மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று. அந்த அதிர்ஷ்டக்காரி குடும்பம் நடத்துவதைப்பற்றி விதம் விதமாய்க் கற்பனை செய்து பார்ப்பேன். ஆனால், ஐயா ஏன் அப்படி இருக்கிறான்? பக்கத்து வீட்டிலிருந்தும் ஐயாவும் நானும் அடிக்கடி சந்திப்பதில்லை. ஒரு நாள் அத்தையிடம் சொல்லி அவனை அழைத்து வரச் செய்து தனியே விசாரித்தேன். என் பேச்சைக் கேட்டதும் அவன் கண்களில் நீர் ததும்பிவிட்டது. "என்னை ஒன்றும் கேட்காதே, ஸீதா! உனக்கே எல்லாம் தெரியவரும்" என்றான். எனக்கொன்றும் புரியவில்லை. மாமியார் சற்று முசுடாயிருக்கலாமென்று எண்ணினேன்.

அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி போய் வரும் சங்கரி, ஐயாவின் புருஷர் அடிக்கடி அவனைக் கோபித்துக் கொள்வதாகவும், அவன் மாமியார்தான் பிரியமாயிருக்கிறாளென்றும் சொல்லுவாள். அதை என்னால் நம்ப முடியவில்லை.

★

அன்று ஐயாவின் நாத்தனார் குழந்தைக்கு ஆண்டு நிறைவு. எங்கள் எல்லோருக்கும் ஐயாவின் வீட்டில் விருந்து. சாப்பாடு முடிந்து எல்லோரும் கூடத்தில் போய் உட்கார்ந்தோம். அத்தை பொழுது போக்காயிருக்குமென்று தெரிந்தவர்களைப் பாடும்படி சொன்னார். முதலில் மறுத்த ஐயா, அத்தையின் வேண்டுகோளைத் தட்டமுடியாமல் பாட ஆரம்பித்தான்.

"ஐயா!" என்ற கடுமையான குரலைக் கேட்டு நானே நடுங்கிப் போனேன். ஐயா எழுந்து போய்விட்டான். பின்னோடு சென்ற சங்கரி திரும்பி வந்து, "அத்தை! நீ ஏன் அவனைப் பாடச் சொன்னாய்? அதற்காக அவன் அடிபடுகிறான்!" என்றான். நாங்கள் எல்லோரும் பிரமித்துப் போனோம். சற்று நேரத்திற்கெல்லாம் அங்கே வந்த ஐயாவின் முகமெல்லாம் வீங்கி இருந்தது.

"இது என்ன, ஐயா?" என்றேன்.

"இதுதான் வாழ்க்கையின் பரிசு!" என்றான்.

"பாடக் கூடாதா?"

இதைக் கேட்டதும் ஐயாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "பாடக் கூடாது, பிறரோடு பேசக் கூடாது, சிரிக்கக் கூடாது, அழவும் கூடாது! இன்னும் என்ன தெரிய வேண்டும்?" என்றான்.



இதற்குள் அவன் மாமியார் "நாலு பேருக்கு எதிரே பாடினால் அவனுக்குப் பிடிப்பதில்லை, என்ன செய்வது? சற்று முன் கோபக்காரன்" என்று வியாக்யானம் செய்தான்.

வீட்டிற்கு வந்ததும் மனம் ஏதோ செய்தது. சற்று வெளி மாடியில் போய்த் தனியே இருக்கலாமென்று போனேன். பக்கத்து வீட்டு மாடி அறையில் ஏதோ பேச்சுக் குரல் கேட்டதால் உற்றுக் கவனித்தேன்.

"அவ்வளவு பேருக்கு நடுவில் இப்படியா அவமானப் படுத்துவது?" என்று விசும்பலுக் கிடையில் ஐயா கேட்டான்.

கிறேனென்று வற்புறுத்திக் கேட்டார். என்னால் பதில் சொல்ல முடியவில்லை. என் கையைப் பற்றியிருந்த அவருடைய கரங்களை ஆவேசம் வந்தவளைப் போல் வெடுக்கென்று உதறித் தள்ளிவிட்டு வேகமாய் என் அறையில் போய் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தேன். அன்று முதல் அவருக்கு என்னிடம் பேசுவதற்குக்கூடப் பயம்தான். எங்களுக்கு நடுவில் ஏதேனும் கேட்பதோ சொல்வதோ எல்லாம் சங்கரி மூலமாகவே நடந்தது. மாமியார், "காப்பி கொடுத்து விட்டு வா" என்றால், மெல்லச் சங்கரியிடம் கொடுத்து அனுப்பி விடுவேன்.

அன்று சங்கரி என்னிடம் தன் அண்ணனைப் பற்றிப் பெருமையாய்ப் பேசிக் கொண்டிருந்தாள். கடைசியில் அவருக்கு சங்கீதத்தில் ரொம்பப் பிரியமென்றும், எவ்வளவோ பெண்களைப் பார்த்திருந்தும் நான்தான் அவரை சங்கீதத்தால் கவர்ந்து விட்டேனென்றும் சொல்லி வந்தாள்.

"அந்த ஒரு குணத்திற்காகவே உன் அண்ணனைக் கண்டு பெண்களெல்லாம் மோகித்து விடுவார்களென்று எண்ணி விட்டாராக்கும்" என்று கேட்டு விட்டேன். என் வாழ்நாளில் என்னையும் மீறி அன்றுதான் மனத்தை விட்டுப் பேசிய நான்.

பின்னால் காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். மனம் திக்கென்றது. அவர் மாடிப் படி ஏறிக் கொண்டிருந்தார். சங்கரி எப்படி நினைத்தாலும் இது அவர் காதில் பட்டிருக்குமோ என்ற கவலை என்னை வருத்தியது. ஆத்திரத்தில் சொல்லிவிட்டுப் பின்னால் ஏன் சொன்னோமென்றிருந்தது. ஆனால் அவர் அது பற்றி என்னை ஒன்றுமே கேட்கவில்லை. நான் எப்படி இருந்தாலும் என்னிடம் எல்லோரும் பிரியமாகவே இருந்து வந்தார்கள்.

★

அன்று வெள்ளிக்கிழமை. வீடு தடபுடல் பட்டது. அவருடைய சிநேகிதருக்குச் சொந்தக்காரர் ஒருவர் இந்த ஊருக்கு மாற்றப்பட்டு அடுத்த வீட்டிற்குக் குடும்பத்துடன் குடி வருகிறாராம். அவருக்கு இரவு இங்கு விருந்து செய்ய ஏற்பாடாகி இருந்தது. தன்னை அலங்காரம் செய்து கொண்டு புது விருந்தாளிகளை எதிர்பார்த்து வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்தாள் சங்கரி.

"இதோ, யார் பார், மன்னி!" என்று என்னை ஒரு குலுக்குக் குலுக்கினாள் சங்கரி. என்னவென்று திரும்பியதும் அவள் பின்னால் வந்த ஜயாவைக் கண்டு திகைத்து விட்டேன். பின்பு ஜயாவின் புருஷர்தான் அந்தப் புது விருந்தாளி என்பது தெரிந்தது. ஒரு வருஷத்திற்குள் ஜயா எப்படி மாறிவிட்டாள்! விளையாட்டும் கேலியுமாய் எப்போதும் சிரித்துக் கொண்டிருந்த ஜயாவின் முகம் ஏன் இப்படி வாட்டமடைந்து விட்டது! எனக் கொன்றும் புரியவில்லை. பக்கத்தில்தானே இருக்கப் போகிறாள், மெல்ல விசாரித்துக் கொள்ளலாமென்று எண்ணினேன். அப்பொழுதுதான் அவளுடைய அழகிய கணவனைப் பற்றி நினைவு வந்தது. அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் சாப்பிடும் பொழுது மெல்ல எட்டிப் பார்த்தேன். அந்த முகம் நான் முன்பே பார்த்த முகமாய்த் தோன்றியது. ஒரு கணம் நினைவு வந்து விட்டது. என் மார்பு படபடத்தது. ஏன்? என்னை முதலில் பார்க்க வந்த பிள்ளைதான் ஜயாவின் கணவன்.

மறு நாள் அவர்கள் பக்கத்து வீட்டுக்குப் போய் விட்டார்கள். ஜயாவைப்



ஜயாவின் கிண்டல் பேச்சுத்தான் என் மனத்தை உறுத்திற்று.

"என்ன ஸீதா! நீ எப்படித்தான் இந்த நீலமேக வர்ணனை மணக்கச் சம்மதித்தாயோ?" என்றாள் ஜயா. அதற்குள், "அவன் பெயர் ராமச்சந்திரன்: இவள் பெயர் ஸீதா. எல்லாம் ஒத்துக்கொண்டு விட்டது!" என்றான் அண்ணா.

"ஓஹோ! தெய்வப் பிறவியா அவர்? அதுதான் ஸீதா ஒரே யடியாக மெய் மறந்து விட்டாள்" என்றாள் ஜயா.

கடைசியில் எனக்குத் தாங்க முடியாமல் அழுகை வந்து விட்டது. இதைக் கண்ட அம்மா, "நன்றாயிருக்கிறது! கல்யாணத்தில் அப்படித்தான் கேலியும் பரிகாசமுமாயிருக்கும். இதற்கெல்லாமா அழுவார்கள்?" என்று கோபித்துக் கொண்டாள்.

அவர்கள் சொல்வதற்காக மட்டுமா நான் அழுதேன்? இருக்கட்டும்; இவர்கள் இஷ்டப்போல் எல்லாம் முடிந்து விட்டது. பின்னால் அந்த மாப்பிள்ளை உள்பட எல்லோருக்கும் சரியான பாடம் கற்பிக்கிறேன் என்று மனத்திற்குள் கருவிக் கொண்டேன்.

★

இதற்குச் சில மாதங்களுக்கெல்லாம் ஜயாவின் விவாகமும் நடந்தேறியது. சில அசௌகரியங்களினால் நான் கல்யாணத்திற்குப் போக முடியவில்லை. அவள் நான் வராதது பற்றி வருத்தம் தெரிவித்து ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அதில் அவளுடைய ராஜ வடிவுள்ள கணவனைப்பற்றிய புகழ்ச்சிதான் அதிகமாயிருந்தது. அது என் துரதிர்ஷ்டத்தைக் குத்திக் காட்டுவதுபோலிருந்தது. எல்லாம் அவரவர்கள் பிராப்தம் போல்தான் இருக்குமென்று என்னை நானே தேற்றிக் கொள்ள முயற்சித்தேன்.

நான் புக்ககம் கிளம்புவதற்கு முதல் நாள் என் மன வேதனையை அடக்கவே முடியவில்லை. அம்மா முதலியவர்கள், நான் அவர்களைப் பிரிவதற்காக அப்படி இருக்கிறேனென்று எண்ணி எனக்கு ஆறுதல் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.


★

புக்ககம் வந்ததிலிருந்து ஒன்றிலேயும் பற்றுதலில்லாமல் இருந்து வந்தேன். நான் என் போக்காக நடந்து கொள்ளச் சங்கரியும் அத்தையும் எவ்வளவோ உதவியாயிருந்தார்கள். சங்கரி அவருடைய ஒரே தங்கை. வயது பன்னிரண்டு. நல்ல குணமுள்ள பெண். நிம்மதி யற்றிருந்த என் மனத்திற்குச் சங்கரியின் நேசம் சற்று ஆறுதலாயிருந்தது. வீட்டோடு இருந்த அவருடைய அத்தையிடம் எல்லோருக்குமே மதிப்பும் மரியாதையும் அதிகம். என் மாமியாரும் அவரும், நான் குதூகலமாய் எல்லாரோடும் கலந்து கொள்ளுவதில்லை என்று குறைப்பட்டுக்கொள்ளும் பொழுதெல்லாம், "சிறிசுதானே! சங்கோசப்படுகிறாள். பழகினால் தன்னாலே சரியாய் விடுவாள்!" என்று சமாதானம் சொல்லுவாள் அத்தை.

அவருக்கு நான் பாடிக் கேட்க வேணுமென்று ரொம்ப ஆசைதான். ஆனமட்டும் பாடுபட்டுப் பார்த்தார். அத்தையின் சலுகையால் நான் அதிலும் தப்பித்துக் கொள்வேன்.

அத்தையின் கட்டாயத்தின் மேல் சில நாள் மாலை வேளையில் வீணையுடன் சேர்ந்து பாட ஆரம்பிப்பேன். ஆனால் அவர் வெளியிலிருந்து உள்ளே நுழைந்த மறுநிமிஷமே எல்லாவற்றையும் நிறுத்திவிடுவேன். இதைக் கண்ட அத்தை சிரிக்க ஆரம்பித்து விடுவாள். எல்லோரும் கூடச் சேர்ந்து சிரித்துவிட்டுப் பேசாதிருக்க வேண்டியதுதான்.

ஒரு நாள் அவர் என்னைத் தனியே அழைத்து நான் ஏன் ஒருமாதிரி இருக்



உள்ளும் புறமும்



சூடாமணி

இவ்வளவு நாணம் அடக்கமான பெண் என்று பெயர் வாங்கி விட்டு இப்பொழுது எதிர்த்துப் பேசத் தைரியமில்லை. இதையெல்லாம் அவர்களே தெரிந்து கொள்வார்கள் என்று எண்ணியிருந்தேன். முகூர்த்த தினம் கூடக் குறித்தாகி விட்டது. என்னை ஒரு வார்த்தை சம்மதமா என்று கூடக் கேட்கவில்லை. எல்லாவற்றையும் அவர்கள் இஷ்டப்படி செய்து விட்டார்கள்.

என்னைப் பார்க்க வந்த பிள்ளைகள் இருவர்தான். முதலில் வந்தவர் நல்ல சிவப்பு; அழகாயிருந்தார். அவரைத்தான் அப்பா நிர்மாணிப்பார் என்றிருந்தேன். ஐந்நூறு ரூபா அதிகம் கேட்பதாகச் சொல்லி அப்பா அந்த வரனை விட்டு விட்டார். இரண்டாவது பார்த்த பிள்ளைதான் இப்பொழுது நிச்சயித்திருப்பது. சிறு வயது; உத்தியோகத்திலிருக்கிறாராம். இருநூறு ரூபாய் சம்பளமாம். என்ன இருந்தென்ன? எனக்கு அவரைத் துளியும் பிடிக்கவில்லை. நல்ல கறுப்பு. அழகில்லாதவர் என்றுதான் எனக்குத் தோன்றியது.

நான் என்ன அப்படி எதிலாவது குறைந்தவளா? நாலு பிள்ளைகளுக்கு நடுவில் ஒரே பெண். எப். ஏ., பி. ஏ. என்று படித்துப் பட்டம் பெறாவிட்டாலும் சங்கீதத்தில் கொஞ்சம் புகழ் கூட உண்டு. மற்றப்படி என் அழகைப் பற்றி நானே சொல்லிக் கொள்வதா? விவாக தினத்திற்கு இரண்டு நாட்கள் முன் அப்பா, அம்மாவிடம் "மாப்பிள்ளையை சீதாவுக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார்.

அப்பொழுதும் அம்மா என்னைக் கேட்காமலேயே பதில் சொல்லி விட்டாள்.

"பிள்ளைக்கென்ன குறைச்சல்? கறுப்பானாலும் நல்ல களையாயிருக்கிறான்; ஒரே பிள்ளை. எல்லாம் சீதா கொடுத்து வைத்தவள்தான்" என்று சொல்லி விட்டாள்.

வீடு நிறைய ஜனங்கள் கூடிக் கூடிப் பேசிச் சிரித்துச் சந்தோஷமாயிருந்தார்கள். என் மனத்தில் மட்டும் வேதனைதான் குடிகொண்டிருந்தது.

மாப்பிள்ளை அழைக்கும் தினத்தில் பகலில் சம்பந்திகளை வரவேற்று விட்டு வந்த என் அத்தை, அப்பாவிடம் "ஏண்டா அம்பி! இவ்வளவு கறுப்பாய் எங்கேயிருந்து பிடிச்சே மாப்பிள்ளையை? பச்சைக் கிளியாட்டமிருக்கும் நம் சீதாவுக்கு ஏற்றவனா அவன்?" என்று கேட்டாள். வருவோர் போவோர் எல்லோரும் மாப்பிள்ளையைப் பற்றியே ஏக முக வென்று பேசிக் கொண்டார்கள். அப்பாவோ அம்மாவோ இதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மறு நாள் தாலியும் கட்டியாகி விட்டது. எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. நான் ஒருவருடனும் கலந்து கொள்ளாமல் தனி அறையில் போய் உட்கார்ந்து கொண்டேன். எல்லாவற்றையும்விட என் மாமா பெண்

பரிசுக் கதை - 3

பிடித்து ஆனந்தத்தைத் தெரிவிக்க முயன்ருர். ஆனல் நல்ல வேளையாக யானையார் பிடியில் நரியார் அகப்பட வில்லை. அகப்பட்டிருந்தால் நரியாரின் கதி என்ன ஆகியிருக்கும் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டிய தில்லை யல்லவா?

முதல் நாள் காட்சியும் முடிந்தது. மறு நாள் இன்னும் சில புதுமைகள் செய்வதாக யானையார் கூறி, நரி யாரை உணவுப்பொருள்களுடன் வீட் டிற்கு வரச்சொல்லி விட்டுச்சென்ருர்.


மறு நாள் காலையில், காட்சிச் சாலையை அடைந்த யானையாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. காட்சிச் சாலையில் ஒரு மனிதனுவது காணப் படவில்லை. நரியாரையும் காண வில்லை. மனிதர்களிருந்த இடமெல் லாம் வெறுப்பாகக் கீழே ஏதோ சிந்திக் கிடந்தது.

யானையாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரே ஏமாற்றம். காட்சிச் சாலை பாழாய்ப் போனதைப் பற்றிக் கூட அவருக்கு அவ்வளவாகக் கவலை யில்லை. நரியார் காணமற் போன தைப் பற்றித்தான் அவருக்குக் கவலை அதிகமாயிருந்தது. ஏனெனில், அவ ரிடந்தானே முதல் நாள் வசூலான உணவுப் பொருள்களெல்லாம் இருக் கின்றன? ஆகவே, விழுந்தடித்துக் கொண்டு நரியாரின் வீட்டுக்கு ஓடினர். அங்கும் நரியாரைக் காண வில்லை. யானையாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அத்துடன் பசியும் அவருக்கு வர வர அதிக மாயிற்று. தன்னை நம்பிக்கை மோசம் செய்த நரியாருக்குத் தக்க தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

உடனே யானையார் அலறிப் புடைத்துக் கொண்டு சிங்க ராஜனை அடைந்தார்.

யானையாரின் புகாரைக் கேட்ட சிங்கராஜா, தம் மந்திரியான புலி யாரை நோக்கி, "புலியாரே! யானை யாருடன் போய் அந்தக் காட்சிச் சாலை நடந்த இடத்தைப் பார்வை யிட்டு விட்டு வாரும்!" என்று உத்தர விட்டார்!

ஸ்தலத்தைப் பார்வையிட்ட மந் திரிப் புலியார் "ஏ! மூட யானையே!



சாமுவும் கோபுவும் மரத்தில் தொங் கிக்கொண்ட காற்றாடியைச் சுலப மாய்ப் பெறுவதற்குச் செய்த யுக்தி!

எங்காவது மனிதர்களைப் பிடித்துக் காட்சிச் சாலையில் அடைத்துக் காட்டு வது முடியுமா? அந்த நரி மெழுகால் மனிதர்களைப் போல் செய்து வைத்து உன்னை ஏமாற்றி உணவுப் பொருள் களை எடுத்துக் கொண்டு ஓடிவிட் டது. அகஸ்மாத்தாக நேற்று மூங் கில் காட்டில் ஏற்பட்ட நெருப்பால் பக்கத்திலிருந்த மெழுகுப் பொம்மைக ளெல்லாம் உருகிவிட்டன!" என்ருர்.

பாவம், யானையார் ஏமாந்து விடு திரும்பினர். ஆனலும் யானையாருக்கு இன்னும் ஆத்திரம் தீரவில்லை. நரி யாரைத் தேடிக் கொண்டிருக்கிருராம். நீங்கள் நரியாரைப் பார்த்தால் பிடித் துக் கொடுங்கள். பாவம், யானையார் சாப்பாடு கிடைக்காமல் பசியோடு மிகவும் கஷ்டப்படுகிருர்!

மனிதக் காட்சிசாலை

-ஜெயஸ்ரீ-

காட்டில் உணவுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்த பிறகு யானையாருக்கு உணவு கிடைப்பது நமக்கு உளுந்து கிடைப்பதைப் போல ஆகிவிட்டது. நம்மில் சிலர் கறுப்பு மார்க்கெட்டில் வாங்குவது போல யானையார் சாமான் வாங்குவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் பலன் இல்லை.

இந்த ஏக்கத்தினால் யானையார் வர வர இளைத்துக் கொண்டே வந்தார்.

ஒரு நாள் "எதற்கும் நம் தோழர் நரியாரைப் போய்ப் பார்ப்போம்; ஏதாவது வழி பிறக்கும்" என்று எண்ணியவாறே நரியாரின் வீட்டை அடைந்தார் யானையார்.

விஷயமறிந்த நரியார் யானையாரின் தும்பிக்கையில் ஏறி யானையாரின்



காதோடு இரகசியமாகச் சில விஷயங்களைக் கூறினார். உடனே யானையார் சிரித்துக் கொண்டே ஆமையார் மாதிரி ஆடி தன் வீட்டை அடைந்தார்.

மறுநாள் காலை காட்டிலுள்ள மரங்களிலெல்லாம் கீழ்க் கண்ட விளம்பரம் ஒட்டப்பட்டிருந்தது.

அற்புதம்! அற்புதம்!!

காட்டில் வெள்ளிக் கிழமையிலிருந்து மனிதக் காட்சிச் சாலை ஒன்று ஆரம்பிக்கப்படும். நம்மை அவமதிக்கும் மனிதர்களுக்கு நல்ல சூடு. அருமையான கண் காட்சி! அனைவரும் டிக்கெட்டிற்கு முந்துங்கள்!!!

இதைப் பார்த்த மிருகங்கள் எல்லாம் "இது என்ன வேடிக்கை! யானையார் மனிதர்களைப் பிடித்துக் கூண்டில் அடைப்பதாவது! இதெல்லாம் நடக்கிற காரியமில்லை. இருந்தாலும் போய்ப் பார்ப்போம்" என்று பேசிக் கொண்டே டிக்கெட் வாங்கத் திரள் திரளாகக் காட்சிச் சாலையை முற்றுகையிட்டுச் சென்றன. டிக்கெட் என்றால் பணம் கொடுத்து டிக்கெட் அல்ல. அரிசியோ, காய்கறி, பழங்களோ தான் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொள்ள முடியும். யானைக்கு வேண்டியது உணவுதானே? வெள்ளிக் கிழமையும் வந்தது. மிருகங்கள் ஏராளமான உணவுப் பொருள்களுடன் காட்சியைப் பார்க்க விரைந்து வந்தன. காட்சியும் ஆரம்பமாயிற்று! குட்டை மனிதன், நெட்டை மனிதன், கால் சராய் போட்ட மனிதன், பட்டணத்து மனிதன், பட்டிக்காட்டு மனிதன், இப்படியாக விதவிதமான மனிதக் காட்சிகளைக் காணக் காண மிருகங்களின் ஆனந்தம் எல்லை கடந்தது.

"மிருகங்களை மனிதன் சர்க்கஸ்களிலும், காட்சிச் சாலையிலும் காட்டி அவமானப் படுத்துவதற்குப் பழிக்குப் பழி வாங்கியாயிற்று. என்ன இருந்தாலும், யானையார் புத்தி யானை புத்திதான்" என்று சொல்லி எல்லா மிருகங்களும் ஆனந்தப்பட்டன. இதைக் கண்ட யானையார் உச்சி குளிர்ந்து போய் நரியாரைக் கட்டிப்

"பாலு! நான் என்னவெல்லாமோ எண்ணி மனக் கோட்டை கட்டினேன். நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கலாமென்று நினைத்தேன். ஆனால்......"

"எல்லாம் தானாக வரவழைத்துக் கொண்ட தலைவலிதானே?"

"ஆமாம்; நான் அப்பொழுதே கதறினேன். 'என்னை அவசரப்பட்டு யார் கழுத்திலாவது கட்டி விடாதீர்கள். அண்ணா பாலுவைக் கலந்து கொண்டு எனக்குக் கல்யாணம் செய்யுங்கள்' என்றேன். ஆனால் அவர்கள்......"

"அண்ணா பாலு!......"

இந்த ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை, ஆயிரம் பேரிடிகள் சேர்ந்து அவன் தலையில் விழுவது போல் இருந்தது. பொறிகலங்கி உட்கார்ந்து விட்டான். வெகுநேரம் கழித்து அவனுக்குச் சுய நினைவு வந்தது.

'அண்ணா பாலு' என்றுதானே அவள் சொன்னாள்? ஆமாம்; அவள் அவ்வாறு நினைத்துத்தான் இதுவரை நடந்து வந்திருக்கிறாள்! அவன்தான் அவள் உறவைத் தவறாக நினைத்து விட்டான்!

அன்று லலிதாவின் சிநேகிதிகள், அவனை 'ஸ்ரீமதி லலிதா பாலு' என்று பிட்டதற்காக அவள் 'கூ கூ' என்று அழவில்லையா? அவள் வெட்கப் பட்டுக் கொண்டு அழுகிறாள் என்று அவன் நினைத்தது பிசகுதானே? சொல்லத் தகாத வார்த்தையை அவர்கள் சொல்லி விட்டார்கள் என்றுதானே மனம் குமுறிக் கதறியிருக்கிறாள்?

அவர்களது பெற்றோர்கள் கல்யாணத்தைப் பற்றிப் பேசும்போது அவள் சிரித்தபோது, அதை ஒரு வேடிக்கைப் பேச்சாக எண்ணித்தான் சிரித்திருக்க வேண்டும் என்பது இப்பொழுதல்லவா தெரிகிறது?

"பாலு! நீ அன்போடு பார்த்தாலே எனக்கு ஆனந்தமாயிருக்கிறது. நீ ஒரு வார்த்தை சொன்னாலே என் துக்கம் எல்லாம் பறந்து போய் விடுகிறது" என்றாள் லலிதா. "நீ எதற்காக வருத்தப்படுகிறாய், சொல்லேன் விஷயத்தை!" என்றான் பாலு கடைசியில்.

"பாலு! அவர் ஒரு டாக்டர் என்பது உனக்குத் தெரியும். ஒரு நிமிஷம்கூட அவர் வீட்டில் தங்குவதில்லை. தங்கினாலும், முகம் கொடுத்து என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசுவது கிடையாது. வேறு யாரிடமோ மனசை வைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. நான் எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்?"

லலிதா அழுகை குமுறிக் கொண்டு வர பாலுவின் காலடியில் விழுந்தாள்.

அந்தக் கணத்தில் பாலுவின் கோபம் அவ்வளவும் பறந்து விட்டது. அவன் ஏக்கம், ஏமாற்றம் யாவும் மறைந்தன. இதுவரை, லலிதாவின் துயரத்தை எத்தனையோ தடவை போக்கிய அந்தக் கனிந்த பார்வையும், அன்பு தோய்ந்த வார்த்தையும் மீண்டும் அவனை வந்தடைந்தது.

"லலிதா! நீயாக ஏன் என்னவெல்லாமோ கற்பனை செய்துகொண்டு அழுகிறாய்? உன் புருஷனைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மகா உத்தம புருஷன் என்று சொல்கிறார்கள். வைத்தியத் தொழிலுக்கே ஆபரணம் மாதிரி என்று எல்லோரும் சொல்லிக் கேட்டிருக்கிறேன்."

லலிதாவின் முகத்தில் அமைதி ஒளி தோன்றிற்று. அவள் கண்களில் தேங்கியிருந்த நீர் மறைந்தது.

ஆனால், "நான் உனக்கு ஆறுதல் சொன்னேன்! எனக்கு யார் ஆறுதல் சொல்வார்கள்?" என்று அப்பொழுது பாலுவின் முகத்தில் எழுதி ஒட்டியிருந்த கேள்வியை மட்டும் அவள் நல்லவேளையாகப் புரிந்துகொள்ளக் கூடவில்லை.

விட்டுப் போன அத்தியாயம்

"சிவகாமியின் சபத"த்தில் 12-ம் அத்தியாயம் விடுபட்டுப் போனதைப் பற்றிப் பல நேயர்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். உண்மையில், எந்த அத்தியாயமும் விடுபட்டுப் போகவில்லை. ஆகஸ்டு 20உ இதழில் 9-ம் அத்தியாயமும் 10-ம் அத்தியாயமும் வெளியாகின்றன. அடுத்த ஆகஸ்டு 27உ இதழில் வெளியாகி இருக்கும் இரண்டு அத்தியாயங்கள் (11, 12-ம் அத்தியாயங்கள்) தவறுதலாக 10, 11-ம் அத்தியாயம் என்று குறிப்பிடப்பட்டு விட்டன. அடுத்த செப்டம்பர் 3உ இதழில் அத்தியாயம் 13 என்று சரியாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எனவே, ஆகஸ்டு 27உ இதழில் வெளியாகி இருக்கும் இரண்டு அத்தியாயங்களையும் முறையே 11, 12 என்று திருத்திக் கொள்ளக் கோருகிறோம். மேற்படி பிழை நேர்ந்ததற்காக வருந்துகிறோம்.

—ஆசிரியர்.

ஆனால், அந்தச் சம்பவம் பாலுவின் மனத்தில் பெரும் கிளர்ச்சியை உண்டாக்கியிருந்தது. லலிதா பழைய லலிதாதான்; அவள் கொஞ்சமும் மாறவில்லை என்ற நினைவு அவனுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

★

ஒரு நாள் ஒருவரும் எதிர்பார்த்திராத சம்பவம் நடந்தது. குடும்பம் ஒன்றும், வீடு இரண்டுமாக இருந்தவர்களுக்குள் திடீரென்று பிளவு ஏற்பட்டது.

அப்பொழுது ராமனாதய்யர் கைசளைத்திருந்த சமயம். கைலாஸமய்யர் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்தால் தமக்குச் சௌகரியமாயிருக்கு மென்று அவர் தெரிவித்துக் கொண்டார். துரதிருஷ்டவசமாக கைலாஸமய்யருக்குக் கோபம் வந்தது. "உம் பணம் யாருக்கு வேண்டும்?" என்று கைலாஸமய்யர் கூறி, ரூபா 3000-ஐ ஒரு பையில் கட்டித் தலையை மூன்று தடவை சுற்றி, ராமனாதய்யரிடம் எறிந்தார். இது அவருக்கு மகா கோபத்தை உண்டாக்கிற்று. உடனே, அவருக்குக் கைலாஸமய்யர் வடிகட்டின அயோக்கியனாகவும், கைலாஸமய்யருக்குத் தம் நண்பர் வெறும் பயலாகவும் தோன்ற, ஊரில் எல்லோருக்கும் இருவரும் இப்பொழுது 'மகா புத்திசாலி'களாகத் தோன்ற ஆரம்பித்தார்கள்.

லலிதாவின் விம்மல் சத்தத்தைக் கேட்டு, தனியே ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த பாலு தலை நிமிர்ந்தான்.

"நான் இனிமேல் உங்களோடு பேசக் கூடாதாம். இங்கே வரக் கூடாதாம்! அப்பா உத்தரவு!" என்றாள் லலிதா.

இதைக் கேட்டதும் அவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது.

முன்பு அவனும் லலிதாவும் பேசாமல் ஓடி ஒளிந்த போது, பெற்றோர்கள் அவர்கள் பேசவேண்டுமென்பதற்காக எவ்வளவோ யுக்திகளைக் கையாண்டார்கள்! ஆனால் இப்பொழுது இருவரது உள்ளமும் ஒன்று சேர்ந்து இருக்கும்போது, அவர்களைப் பிரித்து வைத்துவிட வேண்டுமென்று தலைகீழாக நிற்கிறார்கள். அன்பை அவ்வளவு சீக்கிரம் எடுக்கவோ வைக்கவோ முடியுமென்று நினைக்கிறார்களே! என்ன மடத்தனம்! — என்று வியந்தான்.

"கவலைப்படாதே லலிதா! அதனால் என்ன மோசம்? இந்த உத்தரவு பிரும்மாவின் தலை எழுத்து மாதிரியா? என்றைக்குமே மாறாத உத்தரவா? ஏன் அழுகிறாய்?" என்று தேறுதல் கூறினான்.

சென்னைப் பட்டணத்தில் வேலைக்காக 'இண்டர்வ்யூ'வுக்கு பாலகோபாலனைக் கூப்பிட்டிருந்தார்கள். அவன் சென்னைக்குப் போய் ஒரு வாரத்திற்கெல்லாம் வெற்றியுடன் ஊருக்குத் திரும்பி வந்தான். திரும்பி வந்ததும், மனம் தாளாத அந்தச் செய்தியைக் கேட்டான். அவன் தலை மறைவான சமயம் பார்த்து ராமனாதய்யர் பெண்ணை ஒரு டாக்டருக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார்!

மனப் புண்ணை ஆற்றிக் கொள்வதற்காகப் பாலு வடக்கே சில ஊர்களுக்குப் போனான். கடைசியில் சென்னைக்கு வந்து வேலையை ஒப்புக் கொண்டான்.

சில மாதங்களுக்கெல்லாம் ஊருக்குப் போய்ப் பெற்றோர்களைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் உண்டாகிவிட்டது.

இந்தத் திடீர் விஜயத்தின் போது தான் மிகவும் ஆச்சரியமான சம்பவம் நடந்தது. அந்தச் சமயத்தில், லலிதாவும் ஊருக்கு வந்திருந்தாள்.

லலிதா ஊருக்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்ட தென்பதைத் தெரிந்து கொண்டான். லலிதா வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. அவள் எப்பொழுதும் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறாள் என்று கேள்விப்பட்டான்.

"அழட்டும்! அழட்டும்! அவள் மனச் சாட்சியே அவளை உறுத்துகிறது போலும்! பெண்களுக்கே இந்தப் பின் புத்திதான்! கல்யாணம் செய்து கொண்ட போது அவள் புத்தி எங்கே போச்சு" என்று நினைத்தான் பாலு.

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவன் கண்டிப்பான தீர்மானம் செய்து வைத்திருந்தான். அது, எந்தக் காரணத்தைக் கொண்டும் லலிதாவின் முகத்தில் விழிக்கக்கூடாது என்பதுதான். விழித்தால் அவள் தன் குறைகளைச் சொல்லி அழ ஆரம்பித்து விடுவாள். அவனை மோசம் செய்ததற்காக மன்னிக்கும்படி மன்றாடுவாள். அவனும் அவளுக்கு வழக்கம்போல், "அம்மா அழாதே! மன்னித்து விட்டேன்!" என்று ஆறுதல் சொல்ல வேண்டும். எப்படியிருக்கிறது லட்சணம்!

அவன் எதை நினைத்துப் பயந்தானோ, அது நடந்தே விட்டது. கண்ணீரும் கம்பலையுமாக லலிதா ஒரு நாள் அவனருகில் வந்து நின்றாள்.

குழந்தை உள்ளம் ஆறுதல் அடைந்ததாகத் தோன்றிற்று.

"காமாக்ஷி! இதைப் பாரடீ! இந்தப் பெண் அழுகிறதும் கிழவன் மாதிரி பாலு சமாதானம் சொல்லுகிறதும் எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது, பார்!" என்பாள் விசாலம்.

★

பல வருஷங்கள் சென்றன. கைலாஸ மய்யரும் ராமனுதய்யரும் வெள்ளெழுத்து மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டார்களே தவிர, அவர்கள் கட்சியில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை.

பாலகோபாலன் வாலிபனாகிக் கொண்டிருந்தான். பரீட்சைக்கு அந்த வருஷம் பணம் கட்டியிருந்தான். கணக்குப் பரீட்சைக்காக அவன் ஓயாமல் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த போது, அவன் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. விவரிக்க முடியாத துக்கம் அவனை வாட்டிக் கொண்டிருந்தது.

அது லலிதாவைப் பற்றிய நினைவு தான். எப்படியிருந்த லலிதா இப்பொழுது எப்படி மாறிவிட்டாள் என்று எண்ணி அதிசயித்தான். இப்பொழுதெல்லாம் லலிதா தரையில் நடமாடுகிறதாகவே அவனுக்குத் தோன்றவில்லை. ஒரு கந்தர்வ ஸ்திரீ வான வெளியில் பறந்து செல்வது போலவே அவனுக்குத் தோன்றிற்று. ஆனால் அவனைக் கண்டதும் லலிதா ஏன் இப்பொழுது ஓடி ஒளியவேண்டும்? ஏன் முன்போல் அவன் அவளுடன் கலகலப்பாகப் பேசுவதில்லை?

கைலாஸ மய்யருக்குப் பையன் படிப்புக்குத் தொந்தரவு உண்டாக்கக் கூடாது என்ற எண்ணம் இருந்தது. ஆனால் மனைவிமார்கள் முகூர்த்தத்தைச் சீக்கிரம் வைத்துக்கொள்ள நினைத்ததற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அது என்னவெனில், குழந்தைகள் இருவரும் சங்கோஜத்தினால் கலகலப்பாகப் பேசிக்கொள்ள வெட்கப் படுகிறார்கள் என்பதுதான். முடிச்சைப் போட்டு வைத்துவிட்டால் கவலையே இல்லையல்லவா?

ஒரு நாள் பாலு தன்னந் தனியாக உட்கார்ந்து ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தான்.

"பாலு!" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அது மிகவும் பழகின குரல்; நெடுநாள் கேட்காமல் இருந்து கேட்ட குரல்.

அந்த விநாடியில் இருவர் முகமும் 'குப்' பென்று வியர்த்தது. விவரிக்க முடியாத உணர்ச்சிகள் அவர்கள் மனத்தில் பொங்கின.

"நீங்கள்...நீங்கள்!" என்று ஏதோ ஆரம்பித்தாள் லலிதா.

"நீங்களாவது நீங்கள்? நீ என்று சொன்னால் போதாதா?" என்றான் பாலு.

"அம்மா சொல்கிறாள்..." என்று லலிதா ஆரம்பித்தாள். துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

"என்ன சொல்கிறாள்?"

"நான் உன்னைக் கண்டால் முன் மாதிரி பேசுவதில்லையாம்; ஒளிந்து கொள்கிறேனாம்; இதற்காக அம்மா கோபித்துக் கொள்கிறாள்" என்று அவள் கூறிக்கொண்டிருக்கும் போதே பாலகோபாலனுக்குப் பழைய ஞாபகம் வந்தது. பல வருஷங்களுக்கு முன், "அந்த கோபு என் பின்னலைப் பிடித்து இழுக்கிறான்" என்று அவள் எத்தனையோ தடவை செய்த புகார்களை நினைவூட்டிற்று. "அம்மா சொல்வது நியாயந்தானோ?" என்று கேட்க விரும்பிய போதிலும், "அம்மா கிடக்கிறாள்! கவலைப்படாதே!" என்றான்.

திடீரென்று காமாக்ஷி அங்கே வந்து விட்டாள். பாலுவும் லலிதாவும் பேசிக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்துத் திகைத்து நின்று விட்டாள். அத்துடன் அவர்கள் பேச்சும் அன்று சட்டென்று நின்றது.



பரிசாரகர்:—உங்களுக்கு என்ன ஐயா, வேண்டும்?

சாப்பிட வந்தவர் (பரிசாரகரை ஏற இறங்கப் பார்த்து விட்டு):— தயவு செய்து கோபித்துக் கொள்ளாதீர்கள்; நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்களோ அதையே எனக்கும் கொண்டு வந்து வையுங்கள்! —ரேஜாக்.



ஒரு கேள்வி?

-வஸந்தன்-

★

அந்த ஊரில் எல்லோரும் அவர்களை அசடுகள் என்று சொன்னார்கள். ஏனெனில், கைலாஸமய்யரும் ராமனுதய்யரும் பத்து வருஷங்களாக அடுத்த வீட்டுக்காரர்களாயிருந்தும், ஒருவர் வீட்டு வாசலில் இன்னொருவர் குப்பையைக் கொண்டு போய்க் கொட்டவில்லை. ஒருவர் வீட்டு நாயைப் பக்கத்து வீட்டுக்காரர்கள் செல்லமாகக் கூப்பிட்டுச் சாதம்கூடப் போட்டார்கள்! பரஸ்பரம் தொந்தரவு உண்டாக்கிக்கொள்ள இருவர் வீட்டிலும் ஒரு ஹார்மோனியப் பெட்டியோ, ஒரு கிராமபோன் ரிகார்டோ ஒன்றும் கிடையாது என்றால், அந்த ஊரார் அவர்கள் அந்நியோந்நியத்தைப் பார்த்து அசட்டுப் பட்டம் கட்டினதில் என்ன ஆச்சரியம்?

கைலாஸமய்யரும் ராமனுதய்யரும் இழைவதைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டாலும் அந்த ஆச்சரியம் வெகு நாழிகை நீடித்து நிற்பதில்லை. ஏனெனில், அவர்கள் மனைவிமார்கள் இழைவது அதைவிட ஆச்சரியமாயிருந்தது. காமாக்ஷியும் விசாலமும் ஒருவருக்கொருவர் அவ்வளவு உயிராயிருந்தார்கள். ஆனால், அவர்களது குழந்தைகளாவது சண்டை போட்டு அதைப் பெரிதாக்கிப் பெற்றோர்களின் அசட்டுப் பட்டத்தைப் போக்குவார்களோ என்று பார்த்தால், அதுவும் நடக்கிற வழியாயில்லை. பாலுவும் லலிதாவும் அவ்வளவு ஸ்நேகமாயிருந்தார்கள்.

கைலாஸமய்யரின் பையன் பாலகோபாலனுக்குப் பத்து வயதிருக்கும். ராமனுதய்யர் பெண் லலிதா அவனைவிட இரண்டு வயது சின்னவள்.

"காமாக்ஷி! பாலு மகா சாது! அவன் கழுத்தில் யாராவது ராக்ஷஸியைப் பிடித்துக் கட்டி விடாதே! நம்ம லலிதாதான் அவனுக்கு ஏற்ற பெண்!" என்று விசாலம் அடிக்கடி சொல்லி வந்தாள். "அதற்கென்ன? உன் இஷ்டப்படியே செய்தால் போச்சு!" என்பாள் காமாக்ஷி.

யாராவது இரைந்து பேசினால் அந்த இடத்தை விட்டு ஓடியே போய்விடுவாள் லலிதா! அவள் அவ்வளவு பயந்த சுபாவம்! விளையாடுவதற்கு வெளியே வருவதென்றால்கூட அவளுக்கு நடுக்கம்! அவளது மிரண்ட விழிகளில் எப்பொழுது பார்த்தாலும் யார் தன்னை என்ன செய்து விடுவார்களோ என்ற பயம் குடிகொண்டிருந்தது.

"வீட்டுக்குள்ளே ஏன் அடைந்து கிடக்கிறாய்? ஒருவரும் உன்னை ஒன்றும் செய்ய மாட்டார்கள்!" என்று பாலு அபயம் கொடுத்து லலிதாவை வெளியே அழைத்துக் கொண்டு வருவான்.

விளையாட ஆரம்பித்தது தான் தாமதம்; லலிதா 'ஓ' வென்று அழுது கொண்டு திரும்பி வந்து விடுவாள்.

"பாலு! அந்த பேபி என்னைக் கிள்ளுகிறான்! கோபு என் பின்னலைப் பிடித்து இழுக்கிறான்!" என்று புகார் கொண்டு வருவாள். "அசடே! நான் இருக்கும் போது ஏன் அழுகிறாய்? நாளைக்கு அவர்களைப் பிய்த்துப் பிரியைக் கட்டி இழுத்து விடுகிறேன்" என்று சொல்லி அவளை இழுத்துக் கொண்டு, அங்கே நின்றால் தனக்கும் உதை விழுந்து விடுமோவென்று பயந்து ஓடி வருவான் பாலு.

மனதில் என்ன குறை இருந்தாலும் சரிதான், லலிதா தாயாரிடம்கூடச் சொல்லுவதில்லை. முதலில் பாலுவிடம் தான் சொல்லுவாள். அவன் சாந்த முகத்தைப் பார்த்ததுமே அந்தக்

பிராமணனைப் பார்த்து ஸ்திரீயானவள் "பிராமணோத்தமரே! பொறுத்துக் கொள்ள வேண்டும். என் புருஷனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். அதனால் நேரமாகி விட்டது" என்றாள்.

"புருஷனைக் கவனிப்பது தருமமே! ஆனால் பிராமணர்களை அவமதித்தல் கூடாது. நீ கர்வம் கொண்டவளாக இருக்கிறாய்" என்றான்.

"கோபிக்காதீர்! புருஷனைக் கவனித்துக் கொண்டிருந்த ஸ்திரீயின் பேரில் நீர் பொறுமையை இழந்தலாகாது. நான் கொக்கல்ல! கணவனுக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருக்கும் ஸ்திரீயை உம்முடைய கோபம் ஒன்றும் செய்ய இயலாது" என்றாள்.

பிராமணனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "கொக்கைப் பற்றி இவளுக்கு எப்படித் தெரிந்தது?" என்று வியந்தான்.

ஸ்திரீ இன்னும் சொல்லலானாள்: "பெரியவரே! உமக்குத் தருமத்தின் ரகசியம் தெரியவில்லை போலிருக்கிறது. மனிதனுக்குக் கோபம் சரீரத்துக்குள்ளேயே இருக்கும் பெரும் பகையாகும். அதை நீர் அறியவில்லை. என் குற்றத்தை மன்னித்து நீர் மிதிலைக்குச் சென்று அவ்விடமிருக்கும் தரும வியாதனிடம் உபதேசம் பெறுவீராக!" என்றாள்.

பிராமணன் ஆச்சரிய மடைந்தான். "அம்மணி! உனக்கு மங்களம்! நீ என்னை நிந்திப்பது எனக்கு நன்மையென்றே கருதுகிறேன். நீ எல்லா பாக்கியமும் அடைவாயாக" என்று சொல்லி விட்டு மிதிலைக்குச் சென்றான்.

* * *

மிதிலையில் தருமவியாதன் எவ்விடமிருக்கிறான் என்று கௌசிகன் விசாரித்துத் தேடினான்.

தனக்குத் தருமத்தை உபதேசிக்கத் தக்கவராகச் சொல்லப் பட்ட பெரியவர் ஏதோ ஒரு தனித்த ஆசிரமத்தில் இருப்பார் என்று நினைத்துத் தேடிப் போன பிராமணன் பல அழகிய வீடுகளும் தோட்டங்களும் தாண்டிய பிறகு ஒரு கசாப்புக் கடையிலே ஒருவன் இறைச்சி விற்றுக் கொண்டிருந்ததைப் பார்த்தான். அவனை "இவர்தான் தரும வியாதர்" என்று ஜனங்கள் காட்டினார்கள்!

பிராமணனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆத்திரத்தில் வெறுப்புடன் நின்றான். கசாப்புக் கடைக்காரன் பரபரப்பாக எழுந்து பிராமணனிடம் வந்து, "பகவானே! உமக்குச் சுபம்! அந்த மகா பதிவிரதையான பிராமண ஸ்திரீ உங்களை என்னிடம் அனுப்பினாளா?" என்று கேட்டான்.

பிராமணன் பிரமித்துப் போனான்.

"சுவாமி! நீர் வந்த காரியம் எனக்குத் தெரியும்; வாரும்!" என்று கசாப்புக் கடைக்காரன் சொல்லிப் பிராமணனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அவ்விடம் அவன் தன் தாய் தந்தையர்களுக்குப் பக்தியுடன் பணிவிடை செய்வதைக் கண்டான். பிறகு கௌசிகன் அந்த மாமிசம் விற்பவனால் மனித வாழ்க்கையைப் பற்றியும் தொழிலைப் பற்றியும் கடமைகளைப் பற்றியும் உபதேசம் பெற்றான். பிறகு தன் ஊருக்குத் திரும்பிச் சென்று அதுவரையில் சரியாகக் கவனிக்கப் படாத தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்யத்தொடங்கினான்.

* * *

தரும வியாதர் கதையே கீதையின் உபதேசமும். எல்லாப் பிரவிருத்தியும் சர்வ வியாபகனான ஈசனுடைய செயலே. எல்லாப் பொருள்களிலும் ஈசன் இருப்பதால் எந்தத் தொழிலும் அவன் தொழிலே. சமுதாய அமைப்பினாலோ, விசேஷ சந்தர்ப்பத்தின் காரணமாகவோ, அல்லது தன் முயற்சியின் பயனாகவோ, மனிதனுக்குத் தொழில்கள் ஏற்படுகின்றன. எந்தத் தொழிலையும் தருமம் தவறாமல் சரிவரச் செய்து வந்தால் அதுவே பகவானை உபாசித்தபடியாகும். கசாப்புக் கடை வேலையும் இதில் சேரும் என்கிற இந்தப் பிரசித்தமான கதையை மார்க்கண்டேய ரிஷி சொல்லி தருமபுத்திரன் கேட்டதாக மகாபாரதத்தில் வேத வியாசர் அற்புதமாய்ச் சேர்த்திருக்கிறார்.



வியாசர் விருந்து :

நான் கொக்கல்ல

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பாண்டவர்கள் வனத்தில் வசித்த காலத்தில் ஒரு நாள் மார்க்கண்டேயர் வந்திருந்த சமயத்தில் தருமபுத்திரன் ஸ்திரீகளின் குணங்களை மிகவும் புகழ்ந்து பேசினான்.

"ஸ்திரீகளின் பொறுமையையும் கற்பையும் விட வேறு என்ன வியப்பு உலகத்திலிருக்கிறது? கர்ப்பத்தை வயிற்றில் பத்து மாத காலம் காத்துத் தன் உயிருக்கே சந்தேகம் உண்டாக்கும் ஆபத்தையும், சொல்லுக்கு அடங்காத வேதனையையும் சகித்து ஸ்திரீயானவள் குழந்தையைப் பெறுகிறாள். அந்தக் குழந்தையை மிக்க அன்புடன் வளர்த்து இவன் எத்தகையோன் ஆவானோ என்று கவலைப் படுகிறாள். கொடிய கணவனை அடைந்த மனைவி அவனால் வெறுக்கப் பட்டாலும் பல துன்பங்களுக்கு ஆளாக்கப் பட்டாலும் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அவனிடம் பக்தியாகவே இருப்பதைப் பார்க்கிறோம். இது எவ்வளவு அற்புதமான விஷயம்!" என்றான்.

இதைக் கேட்ட மார்க்கண்டேயர் ஒரு புண்ணிய கதையைச் சொல்லலானார்:

மிக்க நியமத்துடன் பிரமசரிய விரதம் காத்த பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் கௌசிகன். ஒரு நாள் மரத் தடியில் உட்கார்ந்து கொண்டு வேதம் ஓதிக் கொண்டிருந்தான். அப்போது மரத்தின் மேலிருந்து அவன் தலையில் பறவையின் எச்சம் விழுந்தது. மரக் கிளை ஒன்றில் ஒரு கொக்கு இருப்பதைப் பார்த்து அது தான் எச்சம் இட்டதென்று பிராமணனுக்கு அதன் பேரில் கோபம் உண்டாயிற்று. அவனுடைய பார்வை பறவையின் பேரில் பட்டதும் அவனுடைய வாழ்க்கைச் சுத்தத்தின் பயனாக அது செத்துக் கீழே விழுந்தது. உயிரற்று பூமியில் கிடந்த கொக்கைப் பார்த்தவுடன் பிராமணனுக்குத் துயரம் மேலிட்டது.


மனத்தில் எழும் எண்ணங்கள் செய்கைகளாக வடிவம் கொள்ளுவதற்குப் பல புறக் காரணங்களும் சேர வேண்டும். அவை வந்து சேராத காரணத்தினால் அல்லவோ பல தீமைகளிலிருந்து தப்புகிறோம்? எண்ணிய எண்ணங்களெல்லாம் எண்ணியவாறு உடனே ஆகிவிடுவதாக இருந்தால் உலகத்தின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் போகும்.

"கோபத்தில் நான் எண்ணிய எண்ணம் இந்த வேலையைச் செய்துவிட்டதே! ஒரு பாவமும் அறியாத பறவையைக் கொன்றேனே!" என்று கௌசிகன் அயரப்பட்டான். பிறகு வழக்கம்போல் பிக்ஷை எடுக்கச் சென்றான்.


ஒரு வீட்டின் வாயிலில் பிக்ஷைக்காக நின்றான். அப்போது அந்த வீட்டுக்காரனுடைய மனைவி உள்ளே பாத்திரங்கள் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். தன் வேலையை முடித்துவிட்டுத் தன்னைக் கவனிப்பாள் என்று கௌசிகன் காத்துக் கொண்டிருந்தான். அப்போது அந்த ஸ்திரீயின் கணவன் வெளியில் போயிருந்தவன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். வந்தவுடனே உள்ளே நுழைந்து "பசியாக இருக்கிறது" என்றான். அதைக் கேட்ட மனைவி பிக்ஷைக்காக வெளியில் காத்திருந்த பிராமணனைக் கவனியாமல் ஜலம் கொண்டு வந்து புருஷனுடைய கால்களைச் சுத்தம் செய்து ஆசனம் அமைத்து அவனுக்கு ஆகாரம் கொண்டு வந்து வைத்து உபசரித்தாள்.

வாயிலில் பிராமணன் காத்துக் கொண்டேயிருந்தான். புருஷன் சாப்பிட்டு முடிந்த பின் அந்த ஸ்திரீ காத்திருந்த கௌசிகனுக்குப் பிக்ஷை எடுத்துக்கொண்டு வந்தாள். "தங்களை வெகு நேரம் காக்கவைத்தேன். மன்னிக்க வேண்டும்" என்று சொன்னாள்.

கோபத்தினால் நெருப்பைப் போல் ஜ்வலித்துக் கொண்டிருந்த கௌசிகன், "அம்மா! பல வீடுகளுக்குப் போக வேண்டியவனை இவ்வாறு அலட்சியம் பண்ணிக் காக்க வைத்தாய்! இது தகாது" என்றான்.



நண்பனா எதிரியா?



இந்தியாவின் எதிர்காலத்திற்கு, சிக்கனம் மிகவும் முக்கியமானதாகவும் இன்றியமையாததாகவும் இப்போதிருப்பதைப் போல ஒரு போதும் இருந்ததில்லை. இந்த யுத்தகாலத்தில் "வாங்கும் சக்தி" நாட்டில் உபரியாயிருக்கிறது. பணம், ரொக்கம், ரூபாயைத்தான் வாங்கும் சக்தி என்கிறோம். இந்த "வாங்கும் சக்தி"யை உற்ற துணையாக ஆக்கவல்லது சிக்கனம். இத்துணை உங்களுக்கும் நாட்டிற்கும் பயன்படும். இந்த வாங்கும் சக்தியைக் கொண்டு கவலையில்லாமல் செலவு செய்தால் அதுவே கொடுமையான எதிரியாயமாகும். அதாவது விலைவாசிகளை உயர்த்தும். யுத்த காலத்தில் இந்தியாவில் பொருட்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. தேவைகளைக் குறைத்தாலல்லது விலைவாசிகள் உயர்ந்தேதான் இருக்கும். கட்டுப்பாட்டு விதிகளால் விலைவாசிகள் உயராது தடுக்கப்பட்டிருக்கின்றன. விலைவாசிகள் உயராது தடுக்கும் இந்தப் போராட்டத்தில் உங்கள் முழு உதவியும் எமக்குத் தேவை.

பத்திரமாகத் தனியாகப் பணத்தை முதலீடு செய்யுங்கள். வீடுகள், நிலங்கள், கட்டடங்கள், செம்பொருட்கள், பண்டங்கள் ஆகியவற்றின் மீது பணத்தைப் போடாதீர்கள். இந்தக் காலத்தில் மிகச் சிறந்ததும் பல பத்திரமும் லாபகரமான முதலீடுகள், இன்சூரன்ஸ், கூட்டுறவுச் சங்கங்கள், சேமிப்பு, தபாலாபீஸ் சேமிப்பு ஆகியவை, இவை எல்லாவற்றுக்கும் மேல், அரசாங்க கடன் பத்திரங்களிலாவது, தேசீய சேமிப்பு செர்டிபிகேட்டுகளிலாவது முதலீடு செய்யுங்கள்.

நீங்கள் கடைக்குப் போகும் பொழுதெல்லாம் "இது எனக்கு உண்மையிலேயே தேவைதானா?" என்றும் கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். தேவையில்லாத பொருளை வாங்காமல் செய்து கொள்ளுவதனால், விலைவாசிகள் குறைந்திருக்கும்படிச் செய்கிறீர்கள்; உங்கள் பணமதிப்பை உயர்த்துகிறீர்கள்; உங்கள் பணமும் உங்களுக்கு மிச்சமாகிறது.

உங்களால் இயன்றவரை மிச்சப் படுத்துங்கள்.

மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

தேசீயப் போர்முனையார் விடுக்கும் தேசீய வேண்டுகோள்

AAA 1111 T M

"இல்லை, இல்லை; சீக்கிரம் இந்தத் தெப்போத்ஸவம் முடிந்து விடப் போகிறதே என்றுதான் கவலையாயிருக்கிறது" என்றாள் சிவகாமி.

"ஏன்? முடியக் கூடாதா?"

"ஆமாம்; இப்படியே முடிவில்லாமல் என்றென்றைக்கும் வெள்ளத்தில் மிதந்து போய்க் கொண்டிருக்க வேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது."

"ஒருவேளை நீ நினைக்கிறபடி நடந்தாலும் நடக்கலாம். இந்த வெள்ளம் நேரே கீழ் சமுத்திரத்தில் போய்ச் சேரும். தெப்பமும் சமுத்திரத்துக்குப் போய் விட்டால்......"

"ஆஹா! முடிவேயில்லாமல் மிதந்து கொண்டிருக்கலாமல்லவா?...... எனக்கு ஒன்று மட்டும் சந்தேகமாயிருக்கிறது."

"என்ன சந்தேகம், சிவகாமி?"

"இதெல்லாம் கனவா, உண்மையா என்றுதான்."

"கனவு என்பதாக உனக்கு ஏன் தோன்றுகிறது?"

"இந்த மாதிரி தெப்பத்தில் ஏறி முடிவில்லாத வெள்ளத்தில் மிதந்து செல்வதாக அடிக்கடி நான் கனவு காண்பதுண்டு. அதனால்தான் இதுவும் ஒருவேளை கனவோ என்று சந்தேகப்படுகிறேன்."

"இந்த மாதிரி சம்பவம் ஒரு நாள் நேரிடக் கூடும் என்று நான் எண்ணியதே இடையாது. ஆகையால், எனக்கும் இது கனவோ என்று சந்தேகமாயிருக்கிறது."

"ஆனால் என்னுடைய கனவுக்கும் இப்போது நடப்பதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. கனவில் நான் காணும் படகிலே நானும் இன்னும் ஒரே ஒருவருந்தான் இருப்போம்."

"அந்த ஒருவர் யார்?"

"சொல்ல மாட்டேன்!"

* * *

பொழுது சாயும் சமயத்தில், கொஞ்ச தூரத்தில், பூமியும் பாறைகளும் மரங்களும் அடங்கிய காட்சி காணப்பட்டது. எப்போதும் முடிவில்லாமல் தெப்பத்தில் போய்க் கொண்டிருக்க ஆசைப்பட்ட சிவகாமிக்குக் கூட அந்தக் காட்சி ஆனந்தத்தை அளித்தது.

ஒவ்வொருவரும் தத்தம் மகிழ்ச்சியையும் திருப்தியையும் பலவிதமாகத் தெரிவித்தார்கள்.

குண்டோதரனுடைய முகத்தில் மட்டும் மலர்ச்சியைக் காணவில்லை.

"குண்டோதரா! இது என்ன இடம் தெரியுமா? இங்கே நாம் இறங்க வேண்டியதுதானே?" என்றார் மாமல்லர்.

"ஆம், பிரபு! இறங்க வேண்டியதுதான். ஆனால் தீவின் ஓரமாக வெள்ளத்தின் வேகம் கடுமை என்று தோன்றுகிறது. பாறைகள் வேறு இருக்கின்றன!" என்றான் குண்டோதரன்.

தெப்பத்தை அவர்கள் அத் தீவை நோக்கிச் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. தானாகவே வெள்ளத்தின் இழுப்பில் அகப்பட்டுத் தீவை நோக்கிச் சென்றது.

தீவை நெருங்க நெருங்க அதன் வேகம் அதிகமாயிற்று.

கரையோரமாக நின்ற சிறு சிறு பாறைகள் தெப்பத்திலிருந்தவர்களின் கண்ணுக்குப் பயங்கரமாகவும் பிரமாண்டமாகவும் காணப்பட்டன.

பாறைகளின் மீது மோதாமல் தெப்பத்தைத் தீவின் ஓரமாய்ச் செலுத்துவதற்குக் குண்டோதரனும் மாமல்லரும் தங்களாலான மட்டும் முயற்சி செய்தார்கள்!

ஆயினும், தெப்பம் நேரே பாறையில் மோதுவதற்கே போவதுபோல் அதி வேகமாகப் போயிற்று.

தெப்பத்திலிருந்தவர்கள் "இன்றைக்குச் செத்தோம்" என்று தீர்மானித்தார்கள்.

சுகப் பிரம்ம ரிஷி அலறிக்கொண்டு பறந்து போய்ப் பாறையில் உட்கார்ந்து கவலையுடன் பார்த்தார்.

பீர்கள்?'' என்று விம்மிக்கொண்டே கேட்டாள்.

''பைத்தியக்காரி! இவ்வளவு பேர் இருக்கிறோமே? உன்னை விட்டு விட்டுப் போய்விடுவோமா?'' என்றார் ஆயனர்.

''ஆமாம்; இப்போது எல்லாம் சொல்வீர்கள்! விழுந்திருந்தால், திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டீர்கள்!'' என்று சொல்லிக் கொண்டே, சிவகாமி கடைக்கண்ணால் மாமல்லரைப் பார்த்தாள்.

மாமல்லர் புன்னகை புரிந்து, ''ஆமாம்; தெப்பத்திலே ஒரு ஆள் பாரம் குறைந்தது என்று போய் விடுவோம்!'' என்றார்.

சிவகாமி மேலும் விம்மி அழத் தொடங்கினாள்.

• • •



பொழுது ஏற ஏற, மேகங்கள் கலைந்து வானம் நிர்மலமாகிக் கொண்டிருந்தது. நீல வானத்தில் சூரியன் ஜோதிமயமாகப் பிரகாசித்தான்.

தெப்பமும் வெள்ளத்தோடு மிதந்து போய்க்கொண்டே இருந்தது.

சிவகாமி மாமல்லருக்கெதிரில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். இப்போது அவளுடைய முக மலர்ச்சியைப் பார்த்தால் சற்று முன் அவள் விம்மி அழுதிருப்பாள் என்று யாரும் சொல்ல முடியாது.

''இப்படியே தெப்பத்தில் எத்தனை நாள் போய்க் கொண்டிருப்போம்?'' என்று அவள் மாமல்லரைப் பார்த்துக் கேட்டாள்.

''ஏன்? அதற்குள்ளே உனக்கு அலுத்துப் போய் விட்டதா?'' என்றார் மாமல்லர்.

வைத்து விட்டுப் பலமாகக் கரகோஷம் செய்தார்.

"மரம்! மரம்!" என்று குண்டோதரன் கத்தினான்.

"ஐயோ! ஐயோ!" என்று சகரும் சேர்ந்து கூவினர்.

வெள்ளத்தில் வந்து கொண்டிருந்த ஒரு பெரிய விருட்சத்தின் கிளையில் தெப்பம் மோதிச் சுழன்றது.

சிவகாமி கீழே விழப்பார்த்தாள். ஆயனர் அவளைப் பிடித்துக் கொண்டார். உடனே, ஆயனர் மடியில் தலையை வைத்துக் கொண்டு சிவகாமி விம்மி விம்மி அழுதாள்.

"இது என்ன அசட்டுத்தனம், அம்மா! இப்போது ஒன்றும் நேர்ந்து விடவில்லையே?" என்று ஆயனர் சமாதானம் செய்தார்.

சற்றுப் பொறுத்துச் சிவகாமி, "நான் வெள்ளத்தில் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? என்னை விட்டு விட்டுத் தானே எல்லாரும் போயிருப்



நேரமாக ஆக, அவனுடைய ஆர்ப்பாட்டமும் அதிகமாயிற்று.

கடைசியாக, குண்டோதரன் மேல் மச்சின் வழியாக எட்டிப் பார்த்து, "இதோ வந்துவிட்டேன்!" என்றான். அவன் கையிலே ஒரு மூட்டை இருந்தது.

மூட்டையை முதலில் கொடுத்து விட்டுக் குண்டோதரனும் தெப்பத்தில் இறங்கியதும், "மூட்டையில் என்ன?" என்று ஆயனர் கேட்டார்.

அத்தை மூட்டையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "அவல்!" என்றான்.

"இப்பேர்ப்பட்ட ஆபத்தான சமயத்தில் கூடக் குண்டோதரன் வயிற்றுப் பாட்டை மறக்கவில்லை!" என்று சொல்லிச் சிவகாமி சிரித்தாள்.

"உங்களுக்குத்தான் என் விஷயம் தெரியுமே, அம்மா! நான் எது பொறுத்தாலும் பொறுப்பேன்; பசி மட்டும் பொறுக்க மாட்டேன்!" என்றான் குண்டோதரன்.

"நல்ல முன் யோசனை!"

"பிக்ஷு அவல் வைத்திருந்தது எப்படி, அப்பா, தெரிந்தது?"

"சமய சஞ்சீவி தான்!"

இப்படிக் குண்டோதரனை எல்லாரும் பாராட்டிய பிறகு, தெப்பத்தின் ஒரு மூலையில் குண்டோதரனும் இன்னொரு மூலையில் மாமல்லருமாக உட்கார்ந்து, தெப்பத்தைச் செலுத்தத் தொடங்கினார்கள்.

விரைவாக ஓடிய வெள்ளத்தில் பானைத் தெப்பம் இலகுவாக மிதந்து சென்றது. வழியில் தென்பட்ட மரங்களில் மோதாமலும், வெள்ளத்திலே வந்த கட்டைகள் தாக்காமலும் தெப்பத்தை அங்கங்கே வளைத்து வளைத்து விடவேண்டியிருந்தது.

* * *

வானத்தில் மேகங்கள் இன்னும் குமுறிக் கொண்டிருந்தன. காற்றின் வேகம் வெகுவாகக் குறைந்து போயிருந்த தென்றாலும், இலேசாகக் காற்று அடித்தபோது உடம்பில் சில்லென்று பட்டது. அவ்வப்போது நீர்த் துளிகள் கிளம்பிச் சுரீரென்று மேலே விழுந்தன.

சற்று நேரத்துக்கெல்லாம் சிவகாமியின் பயம் பறந்து விட்டது. குதூகலமாய்ச் சிரிக்கவும் விளையாடவும் ஆரம்பித்து விட்டாள்.

தண்ணீரைக் கையினால் அளைந்து கொண்டே சிரிப்பாள். பிறகு, கையில் ஜலத்தை எடுத்துச் சுகரிஷியின் மேல் தெறிப்பாள். சுகர், "ஐயோ! ஐயோ!" என்று கத்திக்கொண்டு, மாமல்லருக்குப் பின்னால் போய் உட்கார்ந்து கொள்வார்.

"உங்களிடம் சுகருக்கு ரொம்பச் செல்லம்; நீங்கள் இடம் கொடுத்துக் கொடுத்துத்தான் சுகர் இவ்வளவு கெட்டுப்போய் விட்டார்!" என்று சிவகாமி மாமல்லர் மேல் குறை கூறினாள்.

"உனக்கு உன் அப்பா இடங் கொடுத்துக் கெடுத்திருக்கிற மாதிரி!" என்றார் மாமல்லர்.

"அப்பா! பாருங்கள் இவர் சொல்வதை! நீங்கள் எனக்கு ரொம்ப இடங் கொடுத்து விட்டீர்களாம்?" என்றாள் சிவகாமி ஆயனரைப் பார்த்து.

"உண்மைதான், அம்மா! உனக்கு ரொம்ப இடங் கொடுத்துத்தான் வளர்த்து விட்டேன். இல்லாவிட்டால் உன் பேச்சைக் கேட்டு..." என்று ஆயனர் மேலே சொல்லப் போனதைச் சிவகாமி தடுத்து,

"அப்படியானால் இப்போது எனக்கு இன்னும் கொஞ்சம் இந்தத் தெப்பத்திலே இடம் கொடுங்கள், அப்பா! எனக்கு ஒரு ஆட்டம் ஆடவேணும் போலிருக்கிறது!" என்று எழுந்து நின்றாள். தெப்பத்தில் மத்தியில் நின்று உண்மையாகவே ஒரு ஸ்வரஜதி ஆடத் தொடங்கினாள்.

கண்ணுக்கெட்டிய தூரம் தண்ணீர் மயமாகக் காணப்பட்ட அகண்ட வெள்ளத்துக்கு மத்தியில், பானைத் தெப்பத்தின் மத்தியிலே நின்று, சிவகாமி நடனம் ஆடிய அற்புதக் காட்சியை ஆயனரும், மாமல்லரும் கண் கொட்டாமல் பார்த்தார்கள். தெப்பம் அசைந்தாடியதைக்கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை.

ஆட்டம் முடிந்ததும் மாமல்லர் கையிலிருந்த கோலைத் தெப்பத்திலே

"பிக்ஷுவையா, வெள்ளத்தில் தள்ளினாய்? அட, பாவி! ஏன் அப்படிப்பட்ட தகாத காரியத்தைச் செய்தாய்?"

"தெப்பத்தில் அவருக்கு இடம் காணாதென்றுதான்!"

"எனக்கு மட்டும் இடம் காணுமா?"

"ஆ! மாமல்லருக்கு இல்லாத இடம் என்னத்திற்கு? தங்களையும் சேர்த்துக் கணக்குப் பண்ணித்தான் பிக்ஷுவுக்கு இடம் காணாதென்று பிடித்துத் தள்ளினேன்!"

"நான் வருவேனென்று எப்படித் தெரியும்?"

"அதுகூடத் தெரியாவிட்டால், மகேந்திர பல்லவரின் ஒற்றர் படையிலே இருக்க முடியுமா, பிரபு!"

மாமல்லர் குதிரையின் முதுகிலிருந்து தாவி, பாலைத் தெப்பத்தில் வெகு லாகவமாக ஏறிக்கொண்டார். பிறகு, குதிரையின் முகத்தை இரண்டு தடவை தடவிக் கொடுத்து, அருமை ததும்பிய குரலில், "தனஞ்செயா! உனக்கும் இந்தத் தெப்பத்திலே இடம் இல்லையே என்று வருத்தமாயிருக்கிறது! எங்கேயாவது ஓடித் தப்பிப் பிழைக்கப் பார்! கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்!" என்று கூறினார்.

உடனே, தனஞ்செயன் என்னும் அந்தக் குதிரை, வெள்ளத்தில் வேகமாக நீந்திக்கொண்டு, மரங்கள் இருவரிசையாகத் தண்ணீருக்கு மேல் தலை நீட்டிக் கொண்டிருந்த சாலையை நோக்கிச் சென்றது.

• • •

குண்டோதரனும் மாமல்லரும் பாலைத் தெப்பத்தைப் பத்திரமாகச் செலுத்திக் கொண்டு, விஹாரத்தினண்டை சென்றார்கள். மேலே இருந்தவர்களைத் தெப்பத்தில் இறக்குவதற்கு வெகு பிரயாசையாகப் போய் விட்டது. முக்கியமாக, சிவகாமிதான் அதிகமான தொந்தரவு கொடுத்தாள். சற்று முன்னால் வெள்ளத்திலே சாவதற்குத் துணிந்திருந்தவளுக்கு இப்போது உயிரின் மேலே அசாத்திய மான ஆசையும், வெள்ளத்தைக் கண்டு பயமும் உண்டாகியிருந்தன.

யார் முதலில் தெப்பத்தில் இறங்குவது என்பதிலேயே தகராறு ஏற்பட்டது. ரதியை முதலில் இறக்கப் பார்த்தார்கள். அது ஒரே பிடிவாதம் பிடித்து இறங்குவதற்கு மறுத்தது.

பிறகு, ஆயனர் ரொம்பவும் வற்புறுத்திச் சொன்னதின் பேரில் சிவகாமி இறங்கச் சம்மதித்தாள். மேலேயிருந்து ஆயனரும் அத்தையும் பிடித்து இறக்க, கீழே தெப்பத்திலிருந்து மாமல்லர் கைகளினால் தாங்கி இறக்கி விட்டார். இறங்கியதும், தெப்பம் ஆடியபோது, சிவகாமி ரொம்பவும் பயந்து 'கூ கூ' என்று அலறினாள். மாமல்லர் அவளைக் கெட்டியாய்ப் பிடித்து உட்கார வைத்துத் தைரியம் சொன்னார்.

பிறகு, அத்தையும் ஆயனரும் இறங்கிய போது தெப்பம் ஆடியதினாலும் சிவகாமிக்கு அசாத்தியமான பயம் ஏற்பட்டது.

சுகர், மேலே வட்டமிட்டுக் கொண்டே இருந்தவர், எல்லாரும் தெப்பத்தில் இறங்கியதும், தாமும் வந்து ஒரு மூலையில் உட்கார்ந்து, அண்ணாந்து பார்த்து, "ரதி எங்கே? ரதி எங்கே?" என்று கூவினார்.

அப்போது தெப்பம் கொஞ்சம் நகரவே, "ஐயோ! ரதியை விட்டு விட்டுப் போகிறோமோ!" என்று சிவகாமியும் சேர்ந்து அலறினாள்.

ரதி மேலேயிருந்து ஒரே தாவாகத் தாவித் தெப்பத்தில் குதித்தது. அதனுடைய முன்னங்கால் ஒன்று தெப்பத்துக்கு அப்பால் தண்ணீருக்குள் போய் விடவே, மறுபடியும் சிவகாமி, "ஐயையோ!" என்று கூச்சலிட்டாள்.

எல்லாரும் உட்கார்ந்து, எல்லாம் ஒழுங்கான பிறகு, குண்டோதரன், "பிரபு! சற்றே இருங்கள்! இதோ வந்து விடுகிறேன்!" என்று சொல்லி விட்டு, தெப்பத்திலிருந்து குதித்து நீந்திக்கொண்டு, விஹாரத்துக்குள்ளே போனான்.

மறுபடியும், குண்டோதரனுக்கு ஆபத்து வந்துவிடப் போகிறதே என்ற கவலையினால் சிவகாமி கூச்சலிட்டாள். அவன் திரும்பி வருவதற்கு

காக வரக்கூடாதா?" என்ற இலேசான எண்ணம் தோன்றியது. "சீ! இதென்ன பைத்தியக்கார எண்ணம்! கைகூடாத விஷயம்!" என்று அவளே தன்னைத்தான் திருத்திக் கொள்ள முயன்றாள்.

ஆனால், இதென்ன விந்தை!—கனவு காண்கிறோமா?—சித்தப்பிரமையா?—அல்லது உண்மைதானா?—நடக்காத காரியம் நடக்கிறதே?—கை கூடாத ஆசை கை கூடுகிறதே?—அதோ வெள்ளத்தில் நீந்திக்கொண்டு வரும் குதிரைமேல் இருப்பவர் மாமல்லர் தானே? வேறு யாருமில்லையே?...... கண்களே! சரியாகப் பாருங்கள்! நெஞ்சே! கொஞ்சம் நிதானித்துக் கொள்!—ஆம், ஆம்; அவர்தான்! சந்தேகமில்லை! பகவானே! பழனி ஆண்டவனே! நடராஜப் பெருமானே! சிவகாமித் தாயே! நீங்கள் எல்லாரும் அருள் புரியுங்கள்! மீதியுள்ள தூரத்தை அவர் அபாயம் இல்லாமல் கடந்து வந்து சேர வேண்டுமே?—அப்பா! அப்பா! யார் வருகிறார் என்று பார்த்தீர்களா? அத்தை! நீ பார்த்தாயா?—ரதி! உனக்குக் கண் தெரிகிறதா? சுக ரிஷியே!—உமக்கு ஏன் வாய் அடைத்திருக்கிறது?......

உண்மையில், சுகப்பிரம்ம ரிஷிக்கு வாய் அடைத்துப் போகவில்லை.

இரண்டு மூன்று தடவை தலையை இந்தப்புறமும் அந்தப்புறமும் வளைத்துப் பார்த்துவிட்டுச் சுகப்பிரம்மரிஷி "மாமல்லா! மாமல்லா!" என்று அழைத்து வரவேற்புக் கூறினார்.

அத்தியாயம் 30

பானைத் தெப்பம்

சுகர் கூறிய வரவேற்பைக் கேட்டதும், மாமல்லரின் முகத்தில் புன்னகையின் சாயை தோன்றியது. சிவகாமி கிளியை அடிப்பதற்காகக் கையை ஓங்கியதும், கிளி அவளுடைய அடிக்குத் தப்பி இறகுகளைச் சட சட வென்று அடித்துக் கொண்டு ஒரு வட்டமிட்டு வந்து சிவகாமியின் தோள்களில் உட்கார்ந்ததும் அவருடைய முகமலர்ச்சியை அதிகமாக்கின.

விஹாரத்தின் ஓரமாகப் பானைத் தெப்பத்தில் வந்து கொண்டிருந்த குண்டோதரனை ஏற்கெனவே மாமல்லர் பார்த்து விட்டார். கையின் சமிக்ஞையினால் "நில்லு!" என்று ஆக்ஞையிட்டார்.

அதே சமயத்தில் மேலேயிருந்து குனிந்து பார்த்த சிவகாமி "அப்பா! இதோ குண்டோதரனும் வந்து விட்டானே! பானைத் தெப்பம் விட்டுக் கொண்டு வருகிறான்!" என்று கூறிக் கையைக் கொட்டி மகிழ்ந்தாள். இரவெல்லாம் அவளுடைய மனத்தில் குடிகொண்டிருந்த பீதியெல்லாம் மறைந்து இப்போது ஏதோ பெரிய வேடிக்கையில் ஈடுபட்டிருப்பது போன்ற குதூகலம் காணப்பட்டது.

தெப்பம் விஹாரத்தின் தூண்களின் மீது இடிக்காதபடி குண்டோதரன் அதைச் சாமர்த்தியமாகத் திருப்பி விட்டுக் கொண்டு குதிரையண்டை வந்தான்.

"யார், அப்பா, நீ! எங்கேயோ பார்த்தமாதிரியிருக்கிறதே!" என்று மாமல்லர் கேட்டார்.

"சத்ருக்னருடைய ஆள், சுவாமி!" என்று கூறிக் குண்டோதரன் தலைப்பில் முடிந்து வைத்திருந்த இலச்சினையைக் காட்டினான்.

"இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?"

"எஜமானர் உத்தரவின் பேரில் எட்டு மாதமாக இவர்களுடன் இருக்கிறேன்."

"படகை நீ ஒருவனாகவே செலுத்தி விட முடியுமா?"

"கஷ்டந்தான், பிரபு! இன்னொரு கையும் இருந்தால் நல்லதுதான்!"

"தெப்பம் எப்படிக் கிடைத்தது?"

"ஒரு வயோதிக புத்த பிக்ஷு தள்ளிக்கொண்டு வந்தார்! அவரை நான் வெள்ளத்தில் தள்ளி விட்டு இதைக் கொண்டு வந்தேன்!"

அவர்களுக்கு அடியோடு போய் விட்டது. "அப்பா! என் அசட்டுத் தனத்தினால் உங்களை இந்த கதிக்கு ஆளாக்கினேனே?" என்று சிவகாமி ஆயனாரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு புலம்பினாள்.

"ஐயோ! இந்த ரதியையும் கிளியையும் எதற்காக அழைத்து வந்தேன்?" என்று வருந்தி, அவற்றை அன்புடன் தடவிக் கொடுத்தாள்.

ரதியும் சுகரும் ஏதோ பெரிய ஆபத்து வந்திருக்கிறது என்பதை உணர்ந்தவைகளாய்ச் சிவகாமியின் அருகில் அருகில் வந்து ஒட்டிக் கொண்டு நின்றன.

"குழந்தாய்! நீ என்ன செய்வாய்? இப்படி நாம் கூண்டோடு கைலாசம் போகவேண்டுமென்று விதி இருக்கும் போது எப்படித் தடுக்க முடியும்? அந்த நாகநந்தியின் பேச்சைக் கேட்டு இப்படியாயிற்று!" என்று ஆயனர் கூறி சிவகாமியின் முதுகில் அருமையுடன் தட்டிக் கொடுத்தார்.

"நாகநந்தியின் மேல் ஒரு தவறுமில்லை; எல்லாம் மாமல்லரால் வந்தது. அப்பா!" என்றாள் சிவகாமி.

"அது எப்படி, அம்மா? மாமல்லர் என்ன செய்தார்?"

"அப்படித்தான், அப்பா! மாமல்லர் தான் காரணம்!" என்று பிடிவாதமாகச் சொன்னாள் சிவகாமி.

சிவகாமியின் உள்ளம் அன்றிரவு அடிக்கடி மாமல்லர் பால் சென்று கொண்டிருந்தது. வாசலில் நின்று தன்னைப் பார்த்தவர், ஒரு வார்த்தை கூடப் பேசாமல் போய் விட்டதை நினைத்து அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அவர் நின்று பேசித் தங்களையும்கூட அழைத்துப்போயிருந்தால் இப்படி நேர்ந்திராதல்லவா?

நல்லது; இந்த வெள்ளத்தில் நாம் செத்துப் போவதே சிலாக்யம். நம்மை இங்கே பார்த்து விட்டுச் சென்ற மாமல்லருக்கு ஒரு நாள் இல்லா விட்டால் ஒரு நாள் நாம் இங்கேயே வெள்ளத்தில் முழுகிச் செத்துப் போனது தெரியாமல் போகாது. அப்புறம் அவர் வாழ்நாளெல்லாம் இதை நினைத்து நினைத்து துக்கப்படுவாரல்லவா? சற்று நின்று அவர்களுடன் பேசாமல் வந்து விட்டோமே என்று வருத்தப்படுவாரல்லவா? படட்டும்! படட்டும்! அவ்வளவு கல்நெஞ்சமுடைய மனிதருக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்! — அப்படி அவரை வருத்தப்படுத்துவதற்காகவே நான் இங்கே வெள்ளத்தில் செத்துப் போவது நல்லதுதான்! ஆனால், பாவம்! — அப்பாவும் அத்தையும் ரதியும் சுகரும் ஏன் இந்த கதிக்கு உள்ளாக வேண்டும்? — பகவானே! திடீரென்று ஏதாவது ஒரு அற்புதம் நேரக் கூடாதா? அப்பா, அத்தை முதலியோர் காப்பாற்றப்படக் கூடாதா? — நான் மட்டும் சாகக் கூடாதா? — தன்னுடைய துரதிர்ஷ்டம், தலைவிதி, அவர்களையும் ஏன் பற்ற வேண்டும்?

இப்படிப் பட்ட எண்ணங்களில் எவ்வளவு நேரம் போயிருக்கும் என்று தெரியாது. விஹாரத்துக்குள்ளே மேலும் மேலும் வெள்ளம் பெருகிக் கொண்டு வந்தது. வெளியிலே புயலும் மழையும் கொஞ்சம் ஓய்ந்திருப்பது போல் தோன்றியது. மச்சுக்குப் போய்ப் பார்க்கலாம் என்று நினைத்து எல்லாரும் மேலே போனார்கள். உண்மையாகவே, புயல் ஓய்ந்து மழையும் விட்டிருந்தது. சிறு தூறல்தான் தூறிற்று. கீழ்த்திசையில் வெளிவாங்கி உதயமாகப் போகிறதென்பதைக் காட்டியது.

அந்த உதய நேரத்து ஒளியில் ஆயனர் முதலியோர் சுற்றுமுற்றும் பார்த்தபோது அவர்கள் என்றும் பாராத அதிசயமான காட்சி காணப்பட்டது. எங்கெங்கும் ஒரே தண்ணீர்ப் பிரவாகமாயிருந்தது. சற்றுத் தூரத்திலிருந்த கிராமத்துக் குடிசை வீடுகளின் கூரையைத் தொட்டுக் கொண்டு வெள்ளம் ஓடிற்று. வீட்டுக் கூரைகளும், வைக்கோற் போர்களும், பெரிய பெரிய விருட்சங்களும் அந்தப் பெரு வெள்ளத்தில் மிதந்து சென்றன.

மேல் தளத்துக்கு வந்து பார்க்கத் தொடங்கியபோது, சிவகாமியின் உள்ளத்தில் அந்தரங்கத்தில், "ஒருவேளை எங்கிருந்தாவது எப்படியாவது மாமல்லர் நம்மைக் காப்பாற்றுவதற்

யத்திலிருந்து திரும்பி வந்தபோது, வழியில் சுவர் ஓரமாக நின்று இருவர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். திருப்பாற் கடலுக்குப் போய் ஏரியை வெட்டிவிட வேண்டுமென்று அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு குரல் எனக்குக் கொஞ்சம் தெரிந்த குரலாயிருந்தது. நீங்கள் சொன்னதிலிருந்து அவன் குண்டோதரனாயிருக்கலாமென்று ஊகித்தேன்."

"சுவாமி! குண்டோதரன் என் சீடன்; எட்டு மாதமாக என்னுடனிருந்து பணிவிடை செய்து கொண்டிருந்தான். அவன் ஏன் ஏரிக் கரையைப் போய் வெட்டுகிறான்?" என்று ஆயனர் கேட்டார்.

"எனக்கு என்ன தெரியும், ஆயனரே! யுத்தகாலத்தில் யாரையும் நம்புவதற்கில்லை. குண்டோதரன் பல்லவ ஒற்றனாகவோ, பகைவர்களுடைய ஒற்றனாகவோ இருக்கலாம். தோற்று ஓடும் படையை ஜயித்தவர்கள் துரத்தாமல் தடுப்பதற்காக ஏரிக்கரையை வெட்டி வெள்ளம் உண்டு பண்ணியிருக்கலாம். எனக்கு என்ன தெரியும்? புத்த சங்கத்தைச் சார்ந்த நாங்கள் இராஜரீக காரியங்களில் தலையிடுவதில்லையென்று வைத்துக் கொண்டிருக்கிறோம்."

"சுவாமி! இப்போது என்ன யோசனை சொல்கிறீர்கள்?" என்று ஆயனர் கடைசியாகக் கேட்டார்.

"இப்போது நான் என்ன யோசனையைச் சொல்வது? சாயங்காலமே போய் விடலாமென்று சொன்னேன்; நீங்கள் கேட்கவில்லை. இந்தப் புயலிலும் மழையிலும் இனிமேல் வெளிக் கிளம்ப முடியாது. கிளம்பினாலும் வழியில் வெள்ளம் வந்து சூழ்ந்து கொண்டால் என்ன செய்வது? எல்லாவற்றிற்கும் பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய் ஒரு பானைத் தெப்பம் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருங்கள். சற்று நேரத்துக்கெல்லாம் இங்கே பெரும் வெள்ளம் சூழ்ந்து விடலாம். அப்படி வந்து விட்டால், நீங்கள் மேல் தளத்துக்குப் போய் இருங்கள். இன்றிரவு நாம் தப்பிப் பிழைத்தால், புத்த பகவானுடைய கருணைதான். உங்களால் நான் தப்பிக்கவும் இயலாமல் போய்விட்டது. ஆஹா! நாகநந்தியடிகள் எப்பேர்ப்பட்ட பொறுப்பை என்னிடம் ஒப்புவித்துவிட்டுப் போய் விட்டார்?"

இவ்விதம் கூறிவிட்டு அந்த வயோதிக புத்த பிக்ஷு நள்ளிரவில் புயலிலும் மழையிலும் விஹாரத்திலிருந்து வெளியில் சென்றார்.

ஆயனர், சிவகாமி, அத்தை, ரதி, சுகர் ஆகிய ஐந்து பேருக்கும் அன்றிரவு தூக்கம் கிடையாது என்று சொல்ல வேண்டியதில்லை. ஆயனருக்கும் சிவகாமிக்கும் ஏற்பட்டிருந்த மனக் கலக்கம் ஒருபுறமிருக்க, காது கேளாத அத்தையின் கேள்விகளுக்கு மறுமொழி சொல்வது வேறு அவர்களுக்குப் பெருந் தொல்லையாயிருந்தது.

புத்த பிக்ஷு வெளியில் போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம், அவர் கூறியபடியே உடைப்பு வெள்ளம் அசோகபுரத்தை அடைந்து விட்டது. முதலில் கொஞ்சமாகத்தான் வந்தது. வீதியில் மட்டும் தண்ணீர் ஓடிற்று. வரவரப் பெருகியது. அப்புறம் மளமளவென்று பெருக ஆரம்பித்து விட்டது. விஹாரத்துக் கதவுகளின் இடுக்கு வழியாக ஜலம் உள்ளே வர ஆரம்பித்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் கதவுகளைப் பிளந்து தள்ளி விட்டு உள்ளே குபு குபுவென்று பாய ஆரம்பித்தது.

வெள்ளம் பெருகத் தொடங்கியதும் ஆயனர் முதலியோர் முதலில் விஹாரத்தின் வெளி வாசல் திண்ணையில் வந்து நின்று பார்த்தார்கள். ஆனால் மழை, புயல், மின்னல் அசாத்தியமாயிருந்தபடியால் அங்கே நிற்க முடியவில்லை. பிறகு உள்ளே சென்றார்கள். உள்ளே தரையில் ஜலம் வந்ததும் மேடைகளில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். மேடைகளிலும் தண்ணீர் வந்ததும், மேல் தளத்துக்குப் போகும் மச்சுப்படிகளில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களை விடாமல் தண்ணீர் மேலே மேலே வந்து கொண்டிருந்தது.

இந்த விபத்திலிருந்து தப்பிப் பிழைக்கலாமென்னும் நம்பிக்கை

இப்படிச் சொல்ல மாட்டாய்! நாளைப் பொழுது விடிவதற்குள் இங்கே யெல்லாம் ஒரே வெள்ளமாயிருக்கும்!" என்றார் பிக்ஷு.

அப்போது சிவகாமி ஆயனர் பக்கம் திரும்பி, "அப்பா! நான் வெள்ளமே பார்த்ததில்லை. நாம் இங்கேயே இருந்து வேடிக்கை பார்க்கலாம். பிக்ஷு வேணுமானால் போகட்டும்!" என்றாள்.

"பெண்ணே! தெரியாமல் உளறுகிறாய்! வெள்ளம் வந்தால் வேடிக்கையாயிராது! பனைமர உயரம் பிரம்மாண்டமாக வரும். இந்த விஹாரம், சைத்யம், எல்லாம் முழுகிப் போய்விடும். அப்புறம் என்ன வேடிக்கையைப் பார்க்கிறது?"

"சுவாமி! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ஆயனர் கேட்டார்.

"பத்து வருஷத்துக்கு முன்னால் இப்படித்தான் ஒரு தடவை திருப்பாற் கடல் நிரம்பி உடைப்பு எடுத்துக் கொண்டது. அப்போது நானே பார்த்திருக்கிறேன். இந்தப் பள்ளத்தாக்கில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் செத்துப் போனார்கள். மீதியுள்ளவர்கள் இங்கே குடியிருப்பது எப்படியும் அபாயம் என்று வேறு மேட்டுப்பாங்கான இடங்களுக்குக் குடிப் போய் விட்டார்கள். அந்த வெள்ளத்திற்குப் பிறகுதான் இந்த அசோகபுரம் இப்படிப் பாழடைந்து கிடக்கிறது!"

இதை யெல்லாம் கேட்டபோது ஆயனருக்கும் சிவகாமிக்கும் ஒருவாறு மனக் கலக்கம் உண்டாயிற்று. ஆயினும், இரவில் அங்கிருந்து கிளம்ப அவர்கள் மனம் இசையவில்லை. அதோடு, அப்போது பெருங்காற்றும் மழையும் வேறு ஆரம்பித்திருந்தன.

சிவகாமி திடீரென்று நினைத்துக் கொண்டு, "அப்பா! குண்டோதரன் சாயங்காலம் வந்தான்; மறுபடியும் மாயமாய் மறைந்து விட்டானே? இந்தக் காற்றிலும் மழையிலும் எங்கே அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறானோ, தெரியவில்லையே?" என்று கவலையுடன் கூறினாள்.

"அவனுடைய நடவடிக்கை விசித்திரமாய்த்தானிருக்கிறது!" என்றார் ஆயனர்.

"ஆ! குண்டோதரன் வந்தானா? எப்போது வந்தான்? எப்போது போனான்?" என்று பிக்ஷு கேட்டார்.

"சாயங்காலம் தாங்கள் ஆலயத்துக்குப் போயிருந்த போது வந்தான். உடனே போய் விட்டான்" என்று ஆயனர் கூற, பிக்ஷு சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

"குண்டோதரன் எங்கே போயிருக்கிறான் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்!" என்றார் பிக்ஷு.

"சொல்லுங்கள், சுவாமி! நாங்கள் நம்பா விட்டாலும் சொல்லி வையுங்களேன்!"

"திருப்பாற் கடல் ஏரிக் கரைக்குத்தான் போயிருக்கிறான்!"

"எதற்கு?"

"கரையை வெட்டி விடுவதற்கு! — அதோ கேளுங்கள் சத்தத்தை!"

ஆம்; அதுவரையில் கேளாத சமுத்திர கோஷம் போன்ற ஒரு சத்தம் அப்போது இலேசாகக் கேட்டது.

ஆயனருக்கும் சிவகாமிக்கும் மனக் கலக்கம் அதிகமாயிற்று. சிவகாமி மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு, "புயலும் மழையும் அதிகமாகி வருகின்றன. அதுதானே சத்தம்?" என்றாள்.

"இல்லை; ஏரி உடைத்துக் கொண்டு விட்டது. நாளைப் பொழுது விடிவதற்குள் இங்கே யெல்லாம் ஒரே வெள்ளமாயிருக்கும்?" என்றார் பிக்ஷு.

"தெருவெல்லாம் தண்ணீர் ஓடுமோ? இந்த விஹாரத்துக்குள்ளே கூட ஜலம் வந்துவிடுமோ?" என்றாள் சிவகாமி.

"விஹாரத்துக்குள்ளே மட்டுமில்லை; விஹாரத்துக்கு மேலே கூட வந்து விடும்!" என்றார் பிக்ஷு.

"சுவாமி! குண்டோதரனைப் பற்றிச் சொன்னீர்களே! அவன் ஏன் ஏரிக்கரையை வெட்ட வேண்டும்?" என்று ஆயனர் கேட்டார்.

"எனக்கென்ன தெரியும்? நேற்று மாலை இருட்டிய பிறகு நான் சைத்

சிவகாமியின் சபதம்

அத்தியாயம் 29

சுகரிஷியின் வரவேற்பு

அதிசயமான பயங்கர சம்பவங்கள் பல நிகழ்ந்த அன்றிரவில், அசோகபுரத்துப் பாழடைந்த புத்த விஹாரத்திலும் ஒரு பெரும் போராட்டம் நடந்தது.

அந்த விஹாரத்தில் தன்னந் தனியாக வசித்துச் சைத்யத்தில் பூஜை நடத்தி வந்த வயோதிக பிக்ஷு, நாகநந்தியுடன் பேசிவிட்டு வந்தவுடனேயே, ஆயனரிடம் அங்கிருந்து உடனே கிளம்புவதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

சிவகாமியை அழைத்து ஆயனர் கேட்டபோது, சிவகாமி ஒரே பிடிவாதமாக அங்கிருந்து கிளம்ப முடியாதென்று சொல்லி விட்டாள். அங்கே சண்டை நடக்கலாமென்று பிக்ஷு சொன்னது அங்கே இருப்பதற்கு அவளுடைய ஆவலை அதிகமாக்கிற்று. அப்படி நடக்கும் சண்டையைக் கண்ணாலே பார்க்க வேண்டும் என்ற விசித்திரமான ஆசை அவள் உள்ளத்தில் உதித்தது. அந்த ஆசையின் மூல காரணம் மாமல்லர் போர்க்களத்திலே நிகழ்த்தும் வீரச் செயல்களைப் பார்க்க வேண்டுமென்பதுதான். அவளுடைய கற்பனைக் கண்ணின் முன்னால் போர்க்களக் காட்சிகள் தென்படலாயின. நாலாபுறமும் சூழ்ந்து வரும் எதிரிகளுக்கு மத்தியில் மாமல்லர் தன்னந் தனியாக நின்று வாளைச் சுழற்றி எதிரிகளின் தலைகளை வெட்டி வீழ்த்துவது போல் அவள் கற்பனை செய்து கொள்வாள். மறுகணம் அந்தக் கற்பனைக் காட்சியின் கோரத்தைக் காணச் சகியாமல், தலையை வேகமாக அசைத்தும் கண்களை மூடித் திறந்தும், மனதை விட்டு அக்காட்சியை அகற்றுவாள்.

இரவு ஒரு ஜாமம் ஆன பிறகு மறுபடியும் அந்த வயோதிக பிக்ஷு ஓடி வந்து "மோசம் போய் விட்டது! உடனே கிளம்புங்கள்! இல்லாவிட்டால் தப்பிப் பிழைக்க முடியாது!" என்று பரபரப்புடன் கூறினார்.

"இன்னும் என்ன ஆபத்து வந்தது?" என்று ஆயனர் அவநம்பிக்கையுடன் கேட்டார்.

"நான் முன்னே இங்கே யுத்தம் நடக்கலாமென்று சொன்னது, நிஜத்தைச் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்றுதான். திருப்பாற்கடல் ஏரி உடைத்துக் கொள்ளும் போலிருக்கிறதென்று கேள்விப்பட்டேன். அதனால்தான் போய் விடலாமென்று சொன்னேன். இப்போது உண்மையாகவே ஏரி உடைத்துக் கொண்டு விட்டது. உடனே கிளம்புங்கள்!" என்றார்.

"சுவாமி! ஏரி உடைத்துக் கொண்டால் என்ன? அதற்காக நாம் ஏன் ஓடவேண்டும்?" என்று சிவகாமி சாவதானமாகக் கேட்டாள்.

கல்கி

"ஏரி உடைத்துக் கொண்டால் என்னவா? திருப்பாற்கடல் ஏரியை நீ பார்த்ததில்லை! பார்த்திருந்தால்

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

24-ம் சென்னை ரேடியோவிலிருந்து மாலையிலும் இரவிலும் கரஹரப்ரியா, பைரவி ராகங்கள் 'சேர' வென்று அருவிபோல் பொழிந்து வந்தன. 'தனயுனிப்ரோவ' என்ற உருப்படியில் ஸ்வரம் பாடும்போது அருகில் யாராவது இருந்தால் அடி விழுந்திருக்கும். இப்படிப் பாடுபவர் டி. சாரநாயகியைத் தவிர வேறு யாராயிருக்க முடியும்? புன்னாகவராளியில் 'கனகசைல' என்ற கிருதியைக் கூடியவரை அடக்கிப் பாட முயன்றார். பாவம்! ஒரு ஸ்திரீக்கு ஞானத்தைக் கொடுத்துச் சாரீரத்தைப் பாரியாய்ப் அமைத்து விட்டால் அவர் என்ன செய்வார்!

அதே நிலையத்தில் இரவு 8 மணிக்கு நடந்த எஸ். ஸ்ரீநிவாஸ ராவ் கச்சேரி ஜோராயிருந்தது. நடுத்தர சாரீரம். எல்லாவற்றையும் இழுத்து நிதானமாயும் அழுத்தமாயும் பாடினார். ஷண்முகப்ரியா சிறந்து விளங்கியது. 'வந்தனே வாரு' என்ற உருப்படியில் நிரவல் ஸ்வர ப்ரஸ்தாரங்கள் அழகாய் அமைந்தன. வானொலியில் 'கௌரி கிரிராஜ குமாரி' என்ற உருப்படிக்கு 'ஷண்முகப்ரியா' ராகம் எனக் கண்டிருந்தது. ஆனால் அவர் கௌரி ராகத்தில்தான் பாடினார்.

நாட்டக்குறிஞ்சி ராகம் அவ்வளவு அபூர்வமாய்ப் போய்விடவில்லை. பல்லவி ராகமாய்க்கூட சர்வ சாதாரணமாய்ப் பாட முடியும் என்பதை சென்னை நிலையத்தில் 25-ம் வி. வி. சடகோபன் காண்பித்தார். அந்த ராகத்தை நல்ல பாணியுடனேயே பாடினார். 'மாரமண வரத முகுந்த ஸநானந்த' என்ற பல்லவியையும் திறமையாய்க் கையாண்டார். ஆனால் தானத்தில் இவர் பாணி வழுகொன்றும் தென்படவில்லை. அதில் வேக காலத்தில் கை வரிசையைக் காண்பிக்க முயன்றது ஒரே சலசலப்பாய் முடிந்தது. சபைகளிலாயினும் சரி, ரேடியோவாயினும் சரி, 'மைக்'குக்கு முன்பாயினும் சரி, கனநயம் கொடுத்து நாஜுக்குப் படுத்திக் கொள்ளும் அவசியத்தை இவர் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

26-ம் சென்னையில் ஸ்ரீமதி ருக்மணி ராஜகோபாலன் தனக்குக் கொடுத்திருந்த நேரத்தில் கணக்காய் எவ்வளவு பாட முடியுமோ அவ்வளவையே எடுத்துக் கொண்டு, அவசரமில்லாமல் ரொம்ப நிதானமாயும், நிச்சயத்துடனும், உயரிய சங்கீதத்துக்கான லக்ஷணங்கள் யாவும் பொருந்தியதாயும் கச்சேரி செய்தார். சதுர்மாய்க் கற்பனை சஞ்சாரங்களை வாரி யள்ளி விட்டு, விச்ராந்தியாய் ஸ்வரங்களில் நீண்ட கார்வைகளைக் கொடுத்தும் பரவசப்படுத்தும் திறமையும் அழுணர்ச்சியும் இவரிடம் காணப்பட்டன. மற்றப்படி கமகம், பிர்க்கா, வளைவு குழைவுகள் இவைகளெல்லாம் எங்கெங்கே எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் பொருந்தியமைந்திருந்தன. மொத்தத்தில் கேட்டபின் மறக்க முடியாத சங்கீதம். தோடி, மோஹனம் இவைகளின் ஆலாபனைகளில், மூன்று ஸ்தாயிகளிலும் படிப் படியாய்க் கற்பனையமைந்து, அழகிய சஞ்சாரங்களுடன் அவைகளின் பூரண வடிவங்களை விளக்கியது கேட்போருக்கு அசாதாரணமான உணர்ச்சியைக் கொடுத்தது. 'ப்ரோவ வம்மா' என்ற மாஞ்சி உருப்படியில் 'அம்ப தேவி' 'ப்ரமமிருஞ்ஞ லகேசநி' என்ற இடங்களிலும், தோடியில் 'தாமஸமேல ஸாமி' என்ற இடத்திலும் ராகபாவம் ததும்பிய சங்கதிக்கு மேல் சங்கதி நாஜுக்காய் அமைந்தது. முகாரி உருப்படியின் விளம்ப கால ராகபாவ நிரவலும், ஸ்வரப்ரஸ்தாரத்தில் ஒவ்வொரு ஸ்வரத்திலும் கண்ட கமக அசைவுகளின் அழகும் அப்படியே. இந்த வகை சங்கீதம் ஆத்மார்த்தமாய்ப் பயின்ற பெண்மணி ஒருவரிடம் காண்பது அபூர்வம்.

அன்று அதே நிலையத்தில் கேட்ட பாலூர் கனக சபாபதி அய்யரின் பாட்டையும் குறிப்பிடாமலிருக்க முடியாது. வாசஸ்பதி, அடாணா, தமிழ்க் கல்யாணி ராகங்கள் சிறந்து விளங்கின. பாடியதிலெல்லாம் செளக்கியமும் அழுத்தமும் கண்டன. நாமக்கல் வழியான தான், கமகப் பொழிவும் தென்பட்டது. ஆனால் சாரீரம் விரிந்த தன்மையது.

27-ம் சென்னையில் வைத்தி விஜயராகவன் தோடி, காம்போதி, சாருகேசி, கரஹரப்ரியா ராகங்களை பிர்க்கா நிறைந்த விருவிருப்புடன் சக்கைப்போடு போட்டார்.

அன்று திருச்சியில் ஆர். வி. சுப்ரமணியம் அவர்களும், பேகடா, மாயா மாளவ கௌள, தன்யாசி, பைரவி ராகங்களை நல்ல பிருகுடன் கையாண்டார். நயமான சாரீரம். அநாயாச உதயபடி. நிரவல் ஸ்வரங்களில் விருவிருப்பு. மொத்தத்தில் கச்சேரி ருசி.

28-ம் சென்னையில் பாடிய பி. எஸ். வேதாசலம் செட்டியாரிடம் சரக்கும் அதிகம், முடுக்கும் அதிகம். கஷ்டமில்லாத மேல் சஞ்சாரங்கள். பருதாளியை வெகு சுலபமாய் விளாசினார். தோடியில் நிதானம், செளக்கியம். ஜகன்மோஹினி மோஹிக்கத் தக்கதாகவே யிருந்தது. கல்யாணி ராகமும் 'தென்பழனி வடிவேலனே' என்ற பல்லவியும் பேஷ்.

அன்று அதே நிலையத்தில் பாடிய வரலக்ஷ்மி பலராமனின் கானமும் கவனத்தை இழுத்தது. முகாரியும், மோஹனமும் சிறப்பாயிருந்தன. அதிக நாஜுக்குக்கு ஆசைப்பட்டுச் சில சமயம் குரலை ரொம்ப அடக்கி விடுகிறார்.

திருச்சியில் அன்று சீதாமணி சேஷசாயியின் பாட்டு ரஸமாயிருந்தது. ரேடியோவிலிருந்து சாரீரத்தின் உண்மையான தன்மையை நிச்சயிக்க முடியாவிடினும், கொஞ்சம் கீச்சுக் குரலுள்ளவர்போல் தென்பட்டது. ஆனால் நல்ல உதயபடி.

30-ம் திருச்சியில் கேட்ட கே. வி. தியாகராஜன் கச்சேரி உயர்ந்த ரகம். பாட்டில் விருவிருப்பும், லய வித்தாரச் சிறப்பும் கண்டது. கல்யாணி, ஆனந்த பைரவி, தோடி சஞ்சாரங்கள் இவைகள் நல்ல வடிவங்களை விளக்கின. 'வடிவேலனுடன்' என்ற பல்லவி பிருகுடன் காணப்பட்டது.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழ் வெளியான "நேரமில்லையே!" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஸ்ரீ. சுவாமிநாதன், மன்னார்குடி.

(முகாம்) சென்னை,
24—10—44.

சென்ற 'கல்கி' இதழில் ஸ்ரீ வி. ரகுநாதன் அவர்கள் கடிதத்தையும், ஆசிரியர் குறிப்பையும் பார்த்தேன். தமிழ் நாட்டிற்கும், தமிழுக்கும் புத்துயிர் அளித்த பாரதியார் அவர்கள் பிறந்த எட்டயாபுரத்தில் அவருடைய ஞாபகார்த்த ஸ்தாபனம் ஒன்று ஏற்படுவது அத்தியாவசியமே. இதற்காகத் தாங்கள் கோரியுள்ள சிறு தொகை வெகு எளிதில் வசூலாகி விடுமென நம்புகிறேன்.

பொதுவாக எல்லா அபிமானிகளையும் குறிப்பாக எனது கோவை ஜில்லா அன்பர்களையும், இது விஷயமாய் உடனே முன் வந்து உதவ வேணுமாய்க் கோருகிறேன். இத்துடன் அனுப்பியுள்ள ரூ. 10-ஐயும் ஷெ நிதிக்காகத் தயவுசெய்து அங்கீகரித்துக் கொள்ளவும்.

தங்கள் அன்பன்,
கே. சுப்பிரமணியம். ('சுப்ரி')

பின்னி மில்ஸ், பெங்களூர்,
25—10—44.

சென்ற வாரம் "கல்கி" இதழில் பாரதியாரின் பேரில் ஏதோ ஒரு கட்டிடம் ஆரம்பம் செய்யப் போவதாகவும், ஆனால் நம் தமிழ் மக்கள் அவ்வளவு தூரத்திற்குப் பண உதவி செய்யத் தயாராய் இருப்பார்களா, இப்பொழுதுதானே அன்னை கஸ்தூரிபாவின் நிதிக்காக ஏராளமான பணத்தை அளித்திருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிறீர்கள். தாங்கள் அப்படி நினைத்ததும் வாஸ்தவமே. தற்சமயம் நம் தமிழ் மக்கள் எவ்வளவோ கொடுமைகளுக்கு ஆளாகி யிருக்கிறார்கள். அப்படி எல்லாமிருந்தும் நம் தமிழ்நாட்டுக் கவிச் சக்கரவர்த்தியின் நிதிக்குத் தனசகாயம் செய்யும்படியான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

தவிர, இருநூறு மைல்களுக்கு அப்பால் மைசூர் இராஜ்யத்தில் இருக்கப்பட்ட எங்களுக்கே அந்த நிதியில் இவ்வளவு ஆர்வம் இருக்கும்பொழுது, நம் பாரதியார் பிறந்து வளர்ந்து தம் கவிகளைச் சொரிந்த தமிழ் நாட்டில் எப்படி இருக்கும்?

இந்தக் கடிதத்துடன் பத்து ரூபாய் பாரதியாரின் நிதிக்காக மணியார்டர் செய்திருக்கிறோம். தயவுசெய்து பெற்றுக் கொள்ளவும்.

என். குமார்
(மற்றும் டப்ளிங் டிபார்ட்மெண்டு சகோதரத் தொழிலாளர்கள்.)

வட்டமேஜை

திருநெல்வேலி
23—10—44.

தமிழ்க் கவிதைகளில் ஊறித் திளைத்த ஒவ்வொரு உள்ளமும்,

"சுவைபுதிது, பொருள்புதிது,
வளம்புதிது, சொல்புதிது,
ஜோதிமிக்க நவகவிதை எந்நாளும்
அழியாத மகா கவிதை"

என்று சொல்லிச் சொல்லியே பல்லாண்டு பாடும் பெருமை மலிந்த பாடல்களை வாரி வாரி வழங்கின நம் பாரதியார்,

"காணி நிலம் வேண்டும் — பராசக்தி
காணி நிலம் வேண்டும்
.... அந்தக்
காணி நிலத்திடையே — நல்மாளிகை
கட்டித் தரவேண்டும்"

என்று உள்ளம் உருகக் கேட்டாரே! கேட்டதைத்தான் பெற்றாரா? அதற்குள்ளே மறைந்து விட்டாரே? திருப்பதிமுதல் தென் குமரி வரை பரந்துள்ள இந்தத் தமிழ் நாட்டில் காணி நிலத்திற்கா பஞ்சம்? மாளிகை கட்டிக்கொடுக்கத்தான் முடியாதா? இல்லை, இல்லை. நாம் நினைத்தால் முடியும். மிக எளிதில் முடியும். உயிருள்ளபோது தான் முடிக்கத் தவறினோம். இன்றாவது முடித்து வைப்போம். அது நமது கடமை. இன்பத்திலோ துன்பத்திலோ அழுந்தும் போதெல்லாம் எவ்வெவருடைய இதய ஒலியானது தமிழ் வடிவில் கிளம்புகின்றதோ அன்றெல்லாம் கண்டிப்பாகச் செய்து முடிக்க வேண்டிய கடமை. இது தெய்வப் பணி. இதனை மேற்கொள்ள வேண்டுமென்று எட்டயாபுரம் பாரதி—இலக்கிய சங்கத்தாரிடை அரும்பிய ஆசைக்கு ஸ்தூல வடிவு கொடுக்கத் தாங்கள் முன் வந்ததை நான் மகிழ்ந்து பாராட்டுகின்றேன். இந்த விதமான பணிக்கெல்லாம் அள்ளிக்கொடுக்க வேண்டும். அள்ளிக் கொடுக்க வசதி இல்லாததால் ஏதோ எண்ணிக் கொடுக்கின்றேன். தயவு செய்து பெற்றுக் கொள்ளவும். தங்களுடைய முயற்சிக்கு மனமாரப் பல்லாண்டு வழங்குகின்றேன்.

தங்கள் அன்பன்,
அ. முத்துசிவன்.

திருவல்லிக்கேணி,
29—10—44.

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

கவி சுப்ரமணிய பாரதியார் பிறந்த எட்டயாபுரத்தில் அவர் ஞாபகார்த்தமாக ஒரு புத்தகசாலை ஏற்படுத்துவதற்காகத் தாங்கள் முயற்சித்து வருவது பற்றி எனக்கு அளவற்ற சந்தோஷம். அதன் அவசியத்தைப்பற்றி எவ்வித சந்தேகமும் வேண்டாம். அதன் வகைக்கு இத்துடன் ரூபாய் 10-0-0 அனுப்பி யிருக்கிறேன். நமது தமிழ் பாஷையில் இப்போது காணும் புத்துயிருக்கு அவரே காரணமென்பதை யாரும் மறுக்க முடியாது. தூங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பி அவர்களுக்குத் தாய் பாஷையிலும் தேசியத்திலும் ஊக்கம் கொடுத்தவர் அவர்.

சென்னை ஹைகோர்ட்டில் அட்வகேட் தொழிலிலும், சுகுண விலாஸ சபையில் ஒரு முக்கிய நடிகராயும் குஷியாய்க் காலம் கழித்து வந்த என்னைப் பொது வாழ்வில் இறக்கி எனது வருமானம் ஆஸ்தி யெல்லாவற்றையும் தேசத்திற்காக அர்ப்பணம் செய்ய வைத்து, தீவிர தேசியத் தொண்டனாக்கியதற்கு ஆதி காரணமா யிருந்தவை பாரதியாரின் சிறந்த தேசிய கீதங்களே. அவை, என்னைப் போலவே, மற்றும் ஆயிரக் கணக்கான யுவர்களை தேசியத் தொண்டில் இறங்கும்படி செய்திருக்கும் என்பது நிச்சயம்.

1926-ம் வருஷம் முதல் சென்னையிலும், தலைவர்களுடன் சுற்றுப் பிரயாணம் செய்த மற்ற ஊர்களிலும், ஒவ்வொரு பொதுக் கூட்டத்தையும் நான் பாரதியாரின் தேசிய கீதங்களைப் பாடிய பிறகே ஆரம்பிப்பது என்ற வழக்கம் வந்தபோது பொது ஜனங்களிடம் அவை எவ்வளவு தேசிய ஊக்கத்தையும் பரபரப்பையும் மூட்டின என்பதை நன்கு அறிவேன். தாங்கள் அவர் ஞாபகார்த்தமான புத்தகசாலை விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்வது பற்றி மிகவும் பாராட்டுகிறேன்.

தங்களன்புள்ள
ச. கிருஷ்ணய்யர்.

ஒழிந்து போகும் எண்ணம் இருப்பதாகவே தோன்றவில்லை. ஹிட்லரின் பிரசாரகர் டாக்டர் கெப்பல்ஸ் நமக்குத்தான் பதில் சொன்னாரோ என்றுகூடத் தோன்றுகிறது. அவர் கடைசியாகச் செய்திருக்கும் பிரசங்கத்தில், "நாலா புறமும் மோதும் அலைகளுக்கு மத்தியில் ஹிட்லர் பாறை மாதிரி அசையாமலிருக்கிறார்" என்று கூறியிருக்கிறார். ஜெர்மனியில் தயாராகும் புதிய இரகசிய ஆயுதங்களைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கிறார்.

எனவே, சர்ச்சில் சொல்லியிருக்கிறபடி இந்த மகா யுத்தத்தின் கடைசி அத்தியாயம் முன் நடந்த யுத்தங்களையெல்லாம் தோற்கடிக்கும்படியான பயங்கர அத்தியாயமாயிருக்குமென்று தோன்றுகிறது.

ஜெர்மனிக்குள் படையெடுத்துச் செல்லும் நேசக் கட்சிப் படைகள் எத்தனையோ கணக்கற்ற உயிர்களைப் பலி கொடுக்க வேண்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இப்போதே பிரான்ஸிலும் ஹாலந்திலும் நேசக் கட்சிப் படைகள் பெரும் சேதங்களை அடைந்திருக்கின்றன. ஜெர்மன் எல்லைக்குள் முன்னேற முன்னேற உயிர்ச் சேதங்கள் அதிகமாகத்தான் செய்யும். ஜெர்மனியரின் கஷ்டங்கள் அதிகமாக ஆக, அவர்களுடைய மனக் கசப்பும் துவேஷமும் அதிகமாகிப் பறக்கும் குண்டுகளைப் போன்ற பயங்கர இரகசிய ஆயுதங்களை அதிகமாகப் பிரயோகிக்கக் கூடும். கடைசியில், விஷப் புகை முதலிய கொடுமைகளைக் கையாளத் துணிந்தாலும் துணிந்து விடுவார்கள்.

அவ்விதமே கிழக்கு அரங்கத்திலும் போலந்து, செக்கோஸ்லோவாகியா, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி முதலிய நாடுகளில் ருஷ்யப் படைகள் முன்னேறி வரும்போது கணக்கற்ற உயிர்ச் சேதங்கள் ஏற்படும்.

இப்படி யுத்தம் நீடிப்பதற்கும் இரு தரப்பிலும் சேதங்கள் அதிகமாவதற்கும் காரணமானவர்கள் ஒரு வகையில் நேசக் கட்சியின் இராஜ தந்திரிகளே என்று சொல்லலாம்.

"ஜெர்மனி நிபந்தனையின்றிச் சரணகதி அடைந்தாலொழிய யுத்த நிறுத்தம் இல்லை" என்ற கொள்கையை மூன்று வருஷத்துக்கு முன்பு இவர்கள் வெளியிட்டவுடன், அதையே நாளது வரையில் வற்புறுத்தி வருகிறார்கள். இந்தக் கொள்கையே ஹிட்லருக்கும் கெப்பல்ஸுக்கும் பிரசார ஆயுதமாக உபயோகப்பட்டு வருகிறது. "எப்படியும் ஜெர்மனியை அடியோடு அழித்து விடுவதென்று நேசக் கட்சியார் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நாமும் கடைசி வரையில் போர் புரிந்து முடிந்த வரையில் அவர்களையும் ஒழிப்போம்!" என்று ஜெர்மன் மக்களிடையே ஹிட்லரும் கெப்பல்ஸும் பிரசாரம் செய்து அதில் வெற்றியும் அடைந்திருக்கிறார்கள்.

கடைசியாக, சர்ச்சில் எதிர்பார்க்கிறபடி அடுத்த வசந்த காலத்திலோ அதற்குப் பிற்பாடோ யுத்தம் முடியும்போது, ஐரோப்பாவில் பெரும் பாகம் ஒரே ஸ்மசான பூமியாக இருக்குமென்று அஞ்சுகிறோம். திடகாத்திரமுள்ள ஆண் மக்கள் லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் செத்துப் போயிருப்பார்கள்.

யுத்தத்தினால் விளைந்த சேதங்கள் காணாதென்று, யுத்தம் முடிந்ததும் ஐரோப்பிய மக்களைப் பஞ்சமும் பிணியும் வேறு பிடுங்கித் தின்னும்.

இந்தக் கஷ்டங்களினால் ஜயித்த தேசங்களுக்குள்ளே கூட அபிப்பிராய பேதங்களும் சண்டை சச்சரவுகளும் வலுக்கும். போலந்து விஷயமாக இப்போதே வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. பிரான்ஸின் புது அரசாங்கத் தலைவரான டி கால் இதற்குள்ளேயே புகார் சொல்ல ஆரம்பித்து விட்டார். "பிரான்ஸை அலட்சியம் செய்துவிட்டு ஜெர்மனியை ஜயிக்க முடியுமா?" என்று உறுமுகிறார்.

யுத்தம் முடிந்த பிறகு இந்த அபிப்பிராய பேதங்களும் சண்டை சச்சரவுகளும் இன்னும் அதிகமாகும் என்பதில் சந்தேகமில்லை.

மொத்தத்தில் சென்ற ஐந்நூறு வருஷமாக உலக மெங்கும் பரவி ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த ஐரோப்பாவுக்கு இப்போது அஸ்தமனம் ஆரம்பமாகியிருக்கிறதென்று தோன்றுகிறது.

* * *

ஆனால், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. மிருகங்களுக்கு அறிவு இல்லை; மனிதர்களுக்கு அறிவு உண்டு. அதிலும், ஐரோப்பிய மக்கள் சிறந்த அறிவு படைத்தவர்கள். இந்த யுத்தக் கொடுமைகளைப் பார்த்த பிறகு, அவர்கள் தங்கள் அறிவை நல்ல வழியில் திருப்ப முயற்சிக்கலாமல்லவா? எனவே, இந்த அஸ்தமனமே ஐரோப்பாவின் நிரந்தரமான க்ஷேமத்துக்கு அஸ்திவாரம் ஆகலாமல்லவா? அதுவே கடவுளின் நியதியாயிருக்கலாமல்லவா?

பெருகி இப்போது அடைந்திருக்கும் செல்வாக்கை அடைந்திருக்கவே முடியாது!

அதுபோலவேதான், ஐரோப்பா கண்டத்து மனிதர்களுக்குப் புத்திக் கூர்மையையும், தேக திடத்தையும், வீர தீரத்தையும், மனோ தைரியத்தையும், கொல்லுக் கொலைக்குக் கொஞ்சமும் பின் வாங்காத கோர சுபாவத்தையும் அளித்த கடவுள், உலகத்தின் அதிர்ஷ்ட வசமாக, அவர்கள் எல்லோரும் சேர்ந்து வாழக் கூடிய சுபாவத்தை அளிக்கவில்லை.

அதற்குப் பதிலாக, தனியாக வாழும் சுபாவத்தையும் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளும் சுபாவத்தையும் அளித்து விட்டிருக்கிறார்.

ஸ்பானியர்கள், பிரஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், டச்சுக்காரர்கள், கிரேக்கர்கள், இதாலியர்கள் — இவர்கள் எல்லோரும் தனித்தனியாகக் கிளம்பிச் சென்றே உலகத்தை இந்தப் பாடு படுத்தி யிருக்கிறார்களே! — இவ்வளவு பேரும் சேர்ந்து ஒரு முகமாகக் கிளம்பி யிருந்தார்களானால், — அம்மம்மா! அப்புறம் இந்த உலகத்துக்குக் கதிமோட்சம் உண்டா? ஐரோப்பாவின் பிடியிலிருந்து உலகத்தின் மற்றப் பகுதிகள் எப்போதாவது விடுதலை அடைய முடியுமா?— முடியவே முடியாது!

ஐரோப்பா பல தேசங்களாகப் பிரிந்து, பல பாஷைகளையும் கைக்கொண்டிருப்பதனால், உலகத்தின்மீது அவர்களுடைய ஆதிக்கம் இந்த மட்டும் இருக்கிறது! ஐரோப்பா முழுதும் ஒரே தேசமாய், ஐரோப்பா ஜனங்கள் முழுதும் ஒரே ஒற்றுமையான ஜாதியாய் இருந்து விட்டால், இந்த ஒரு உலகத்தைத்தானா, — மேல் உலகங்களை யெல்லாம் கூடக் கைப்பற்றி அடிமைப்படுத்தினாலும் படுத்தி விடுவார்கள்!

புலிகளும் சிங்கங்களும் தனித்தனி வாழ்க்கை நடத்திய போதிலும் தங்களுக்குள் அவை அதிகமாகச் சண்டை போட்டுக் கொள்வதில்லை. ஐரோப்பாவின் அதிசய மக்களிடமோ அந்த அருமையான சுபாவமும் இருக்கிறது. தங்களுக்குள்ளேயே அடிக்கடி பயங்கரமான சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அதுவும் ஏதோ கடவுளால் உலகம் நடப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட நியதி! யென்றே தோன்றுகிறது. இல்லாமற் போனால் உலகம் ஐரோப்பியர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டு என்ன பாடுபடும் என்று யோசித்துப் பாருங்கள்.

அதாவது, ஜெர்மானியரும் பிரெஞ்சுக்காரரும் இதாலியரும் போலிஷ்காரரும் பிரிட்டிஷாரும் ருஷியர்களும் பால்கன் பிரதேசத்து மகா மூர்க்க ஜனங்களும் எல்லோரும் ஒரே கும்பலாய், ஒரே ஒற்றுமையாய், ஒரே ஜாதியாய், ஒரே இனமாய், ஒரே அரசாங்கமாய் மட்டும் இருந்து விடும் பட்சத்தில், ஆகா! இந்த உலகத்தை அவர்கள் என்ன பாடு படுத்தி வைக்க மாட்டார்கள்! வேறு எந்தக் கண்டத்திலாவது, எந்த மக்களாவது, சுதந்திரத்தோடு வாழ முடியுமா? சுதந்திரம் என்ற பேச்சையே எடுக்கப்படுமா? மக்கள் சமூகம் எல்லாம் ஐரோப்பியர்களுக்கு அடங்கி ஒடுங்கி அவர்கள் தயவுக்கு எதிர் பார்த்து, இப்போது மட்டுமல்ல, — என்றென்றைக்கும் அவ்விதம் ஈன வாழ்வு வாழ வேண்டியதாகத்தான் இருக்கும்!

கடவுள் எல்லாம் ஒரு நல்லதுக்காக, ஒரு நியதியின்படிதான் உலகத்துக்காரியங்களை நடத்திக் கொண்டு வருகிறார். இப்போது ஐரோப்பாவிலே நடக்கும் பயங்கரப் பைசாச யுத்தமும் அந்த நியதியின்பால் பட்டதுதான் போலும்!

* * *

"இந்த நிலைமையைப் பற்றிச் சமீபத்தில் சர்ச்சில் பார்லிமெண்டில் செய்த பிரசங்கமானது மேற்கூறிய கடவுள் நியதியை நமக்குத் தேர்ந்து பிடித்து எடுத்துக் காட்டியது.

ஆறு மாதத்திற்கு முன்னும் பேசிய தற்கு இப்போது சர்ச்சிலின் ஸ்வரம் கொஞ்சம் இறங்கியிருப்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். முன்னே, இந்த வருஷத்துக்குள்ளே யுத்தம் முடிந்தாலும் முடிந்து விடலாம் என்று சர்ச்சில் சொன்னார். திபேத் லாமாவின் ஜோசியத்தின் கதி தமது ஜோசியத்துக்கும் நேர்ந்து விடலாமென்று பயந்து இப்போது கொஞ்சம் தள்ளிப் போட்டிருக்கிறார். அடுத்த வருஷம் வசந்த காலத்துக்குள் அநேகமாக முடியாதென்று கூறி யிருக்கிறார். அதற்குள்ளே யுத்தம் முடிவதற்கு ஜெர்மனிக்குள்ளே உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட வேண்டுமென்றும், அப்படி ஏற்படுமென்று தோன்றவில்லை யென்றும் தெரியப்படுத்தி யிருக்கிறார். ஜெர்மனிக்குள்ளே ஜெர்மன் மக்களையும் இராணுவத்தையும் தழுவியுள்ள இரும்புக் கட்டுப்பாட்டைக் காரணமாகவும் கூறிப் பிட்டிருக்கிறார்.

அடால்ப் ஹிட்லருக்கு நாம் "ஒரு வார்த்தை" சொன்னோமே, அது கொஞ்சமும் பயன் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மனுஷருக்கு அவராக

ஐரோப்பாவின் அஸ்தமனம்

உலகத்திலே அக்கிரமக்காரர்கள் வெற்றியடைந்து பெரிய பதவிகளில் இருப்பதைப் பார்க்கும் போதெல்லாம், நமக்கு ஆத்திரமும் துயரமும் உண்டான போதிலும் ஒரு விஷயத்தை எண்ணி உற்சாகம் அடைகிறோம்.

“ஆ! இவர்களுடைய வாழ்வு எத்தனை நாள் நீடித்திருக்கப் போகிறது? என்றாவது ஒரு நாளைக்குத் தொலைந்து போகவேண்டியதுதானே!” என்று எண்ணி உற்சாகம் கொள்கிறோம்.

அக்கிரமங்களையும், அக்கிரமக்காரர்களின் பவிஷையும் பதவியையும் பார்த்து மனிதர்கள் மனமுடைந்து போகாமலிருப்பதற்கு, “இது எங்கே நிலைத்து நிற்கப் போகிறது?” என்கிற எண்ணந்தான் நமக்கு உதவியாயிருக்கிறது.

உதாரணமாக, ஐரோப்பா கண்டத்து மக்களின் சென்ற நானூறு வருஷத்துச் சரித்திரத்தையும் வாழ்வையும் பார்க்கலாம். அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு அக்கிரமங்களைச் செய்தார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய வாழ்வு உயர்ந்து கொண்டே போயிற்று.

ஐரோப்பாவிலிருந்து சென்ற நானூறு வருஷ காலத்தில் உலகத்தின் மற்ற நாடுகளைச் சுரண்டுவதற் கென்றும், கைப்பற்றி அடிமைப்படுத்தி ஆள்வதற்கென்றும் கும்பல் கும்பலாக ஜனங்கள் கிளம்பிப் போய்க் கொண்டே இருந்தார்கள். போர்ச்சுகலிலிருந்து கிளம்பிப் போனார்கள்; ஸ்பானியர்கள் கிளம்பிப் போனார்கள்; பிரெஞ்சுக்காரர்களும் டச்சுக்காரர்களும் போனார்கள்; ஜெர்மானியர் போனார்கள்; பிரிட்டிஷார்தான் போகவே போனார்கள்; கடைசி கடைசியாக, இதாலியர் முஸோலினியின் தலைமையில் கிளம்பி, ஆப்பிரிக்காவிலே கடைசி சுதந்திர நாடாக பாக்கியிருந்த அபிஸீனியாவைக் கைப்பற்றிக் கொண்டார்கள்!

இப்படிப்பட்ட அக்கிரமங்களை எண்ணிப் பார்க்கும் போதெல்லாம், உலகத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள சாதுக்கள் பெருமூச்சு விட்டுவிட்டு, “இருக்கட்டும்; ‘இருக்கட்டும்! என்றைக்காவது ஒரு நாள் இந்த ஐரோப்பாவின் அகம்பாவ வாழ்வுக்கும் அஸ்தமனம் ஏற்பட்டுத்தானே தீரும்? எத்தனை நாள் இந்த அக்கிரமங்கள் நடந்து கொண்டிருக்கும்? எவ்வளவு நாள் பூமாதேவிதான் பொறுப்பாள்?” என்று எண்ணி ஆறுதல் பெறுவது வழக்கம்.

அவர்களுடைய எண்ணம் இப்போது ஒருவேளை நிறைவேறப் போகிறதோ, ஐரோப்பாவின் வாழ்வுக்கு அஸ்தமனம் கிட்டி விட்டதோ என்று நினைக்கும்படியிருக்கிறது. இப்போதைய யுத்த நிலைமையை முன்னிட்டுத்தான் இவ்வாறு நாம் சந்தேகிக்க நேரிடுகிறது.

* * *

“பகவான் உலகத்தைச் சிருஷ்டித்து விட்டு, உலகம் நடப்பதற்குரிய சில நியதிகளையும் ஏற்படுத்திவிட்டார்! அந்த நியதிகளின்படியே எல்லாம் நடந்து வருகிறது!” என்று உபநிஷதம் சொல்கிறது.

அவ்விதம் உலகம் தானே நடப்பதற்காகக் கடவுள் ஏற்படுத்தியுள்ள சில நியதிகள் மிகவும் புத்திசாலித்தனமாக இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை! (எத்தனையோ பேரைக் காரணத்தோடும் காரணமில்லாமலும் நாம் பாராட்ட வேண்டியதாயிருக்கும் போது, பகவானையும் சில சமயம் பாராட்டித்தான் வைக்கலாமே? நஷ்டம் என்ன வந்தது?)

ஒரு உதாரணம் பார்ப்போம். புலி, சிங்கம், சிறுத்தை முதலிய துஷ்ட மிருகங்களைக் கடவுள்தான் சிருஷ்டித்திருக்கிறார். அவற்றுக்கு அசாத்தியமான தேக பலத்தையும், வேகத்தையும், துணிச்சலையும், கோர சுபாவத்தையும் அளித்திருக்கிறார். ஆனால், நல்லவேளையாக, கூட்டமாகக் கூடி வாழும் இயற்கையை அவைகளுக்கு அளிக்கவில்லை. தனித் தனியாகத் திரிந்து தனியாக சஞ்சரிக்கும் இயற்கையை அளித்திருக்கிறார். இதனால்தான், உலகிலுள்ள மற்றப் பிராணிகள் எல்லாம் ஏதோ தப்பிப் பிழைத்து உயிர் வாழ முடிகிறது.

புலிகளும், சிங்கங்களும் காட்டில் கூட்டமாகத் திரிவது என்று ஏற்பட்டு விட்டால், அப்பப்பா! உலகத்திலே இத்தனை பிராணிகள் பெருகியிருக்கவே முடியாது. மனித சமூகம் பல்கிப்

ஒரு நிரபராதியின் உயிர் வாங்கப்படுவதைக் காட்டிலும், பல குற்றவாளிகள் தப்பிச் சென்றாலும் பாதகமில்லை என்பது அவர்கள் கருத்து.

அப்பீலுக்கு உதவுக

தமிழ் நாட்டில் மரண தண்டனைக்கு ஆளான இருவருடைய விஷயம் சில காலமாகத் தமிழ் மக்களின் மனதைக் கவர்ந்திருக்கிறது. இவர்கள் 'குலசேகரப் பட்டினம் கலக வழக்கு' என்று பிரசித்தி பெற்ற வழக்கில் எதிரிகள். 1942-ல் காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்து, கர்னல் அமெரி பார்லிமெண்டில் உளறியதும், தேசமெங்கும் குழப்பங்கள் ஏற்பட்ட போது, திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த குலசேகர பட்டினத்திலும் ஒரு குழப்பம் நடந்தது. அதில், உப்பு இலாகா அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக நடந்த வழக்கில் ராஜகோபாலன், காசிநாதன் என்னும் இரண்டு இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (இந்த இரண்டு பேரில் ஒருவர் நமது துணைக் "கல்கி" நடந்து கொண்டிருந்த போது, ராஜாஜியின் திட்டத்தை ஆதரித்துக் கடிதம் எழுதி அது பிரசுரமாகியிருக்கிறது.) எப்படியோ பொதுஜனங்களின் மனதில் இந்த தண்டனை சம்பந்தமாகச் சரியான நீதி வழங்கப்பட்டதென்ற நம்பிக்கை ஏற்படவில்லை. அதற்குத் தகுந்தாற்போல், இந்தியாவிலுள்ள மிகப் பெரிய கோர்ட்டாகிய பெடரல் கோர்ட்டில் நடந்த அப்பீலில், மூன்று நீதிபதிகளில் ஒருவர் (நீதிபதி வரதாச்சாரியார்) மரண தண்டனையை ஊர்ஜிதப்படுத்தச் சாட்சியம் போதவில்லை என்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

இந்த நிலைமையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் முடிவான கோர்ட்டாகிய பிரிவி கௌன்ஸிலுக்கும் அப்பீல் செய்து பார்த்துவிட வேண்டுமென்று தீர்மானித்து, அதற்குரிய ஏற்பாடு செய்யும் பொறுப்பை ராஜாஜி மேற்கொண்டிருக்கிறார். அப்பீல் செலவுக்கு ரூபாய் பத்தாயிரம் தேவையென்று விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார். முக்கியமாகத் திருநெல்வேலி ஜில்லாக்காரர்களுக்கு அவர் விண்ணப்பம் செய்திருந்த போதிலும், மற்றவர்களும் கொடுக்கக் கூடாதென்பது கிடையாது. நியாயப் பற்றும் கருணை உணர்ச்சியும் உள்ளவர்கள் எல்லாரும் தங்களால் ஆன உதவியைச் செய்யலாம். சங்கரன் கோயில் ஸ்ரீ எஸ். என். அம்பலவாணம் பிள்ளைக்கோ, ராஜாஜிக்கோ தொகையை அனுப்பி வைக்கலாம்.

பாரதியார் ஞாபகச் சின்ன நிதி

பாரதியார் பிறந்த எட்டயாபுரத்தில் பாரதியாரின் ஞாபகார்த்தமாக ஒரு புத்தகாலயம் ஸ்தாபிக்கும் பொருட்டு இந்த நிதி வசூலிக்கப்படுகிறது. தமிழன்பர்களும் தேசபக்தர்களும் தத்தம் நன்கொடையைப் பின்வரும் விலாசத்துக்குக் கூடிய சீக்கிரம் அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

மானேஜர், "கல்கி", சென்னை.

இதுவரை மேற்படி நிதிக்குப் பணம் அனுப்பியிருப்பவர்களின் விவரம்:—

ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்,
குற்றாலம் ரூ. 50—0—0

டாக்டர் பி. சுப்பராயன் (மாஜி மந்திரி), சென்னை ரூ. 25—0—0

ஸ்ரீ என். கே. ராமநாதன்,
திருநெல்வேலி ரூ. 20—0—0

ஸ்ரீ கே. சுப்பிரமணியம் ('சுப்ரி'),
கோயமுத்தூர் ரூ. 10—0—0

டாக்டர் எல். கே. முத்துசாமி,
ஈரோடு ரூ. 10—0—0

ஸ்ரீ வி. சுப்பிரமணியம் அட்வகேட்,
கோயமுத்தூர் ரூ. 10—0—0

ஸ்ரீ ஊ. கிருஷ்ணயர், "பிரபிரதல்"
ஆசிரியர், சென்னை ரூ. 10—0—0

ஸ்ரீ என். குமாரசாமி, பின்னி மில்ஸ்,
பங்களூர் ரூ. 10—0—0

ஸ்ரீ எஸ். சந்தானம், லாயிட் ரோட்,
மயிலாப்பூர் ரூ. 10—0—0

அகஸ்தியர் புத்தகசாலை,
திருச்சிறுப்பள்ளி ரூ. 10—0—0

ஸ்ரீ கி. ரகுநாதன்,
மயிலாப்பூர் ரூ. 5—0—0

டாக்டர் சி. நஞ்சப்பா,
கோயமுத்தூர் ரூ. 5—0—0

டாக்டர் கோபால கிருஷ்ணய்யர்,
மயிலாப்பூர் ரூ. 5—0—0

ஸ்ரீ என். ராஜகோபாலன், பி. ஏ.,
சங்கீத வித்வான், சென்னை ரூ. 5—0—0

ஸ்ரீ வி. ஆர். நரசிம்மன்,
தியாகராயநகர் ரூ. 5—0—0

ஸ்ரீ எஸ். கே. மகாலிங்கம்,
"கல்கி" ஆபீஸ், சென்னை ரூ. 5—0—0


ஸ்ரீ ஆ. முத்துசிவன், தமிழாசிரியர்,
திருநெல்வேலி ரூ. 4—0—0

ஸ்ரீ ஜி. பரமன் செட்டியார்,
சேலம் ரூ. 3—0—0

ரூ. 202—0—0



"அரசியல் துறையில் முஸ்லிம்லீக் மற்ற எல்லாக் கட்சிகளை விட மேலாக நிற்கிறது." —ஜனாப் ஜின்னா



இந்திய முதலாளிகளின் பிரதிநிதியாக வைஸ்ராய் நிர்வாக சபையில் சேர்ந்தவர் அர்தேஷிர் டலால் திகாரவர்க்கத்துடனேயே பூரணமாய் ஐக்கியமாகி விட்டதாகத் தோன்றுகிறது.

மிஸ்டர் அதிகாரவர்க்கத்தின் ஏமாற்றம்



இந்தியாவின் பல மாகாணங்களில் காங்கிரஸ் வாதிகள் கூட்டம் கூடி வருங்கால வேலையைப் பற்றி யோசித்து வருகிறார்கள்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 14


என்ன சேதி?

ஞாபகச் சின்னம்

பெயர் பெற்ற கலை விமரிசகரும், சிறந்த தேச பக்தரும், தாய்நாட்டின் தொண்டில் பல கஷ்ட நஷ்டங்களை அநுபவித்தவருமான ஸ்ரீ ச. கிருஷ்ணையர் அவர்களை நாம் புதிதாக நேயர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. தற்சமயம் அவர் "Free Press" என்னும் ஆங்கில தினசரிப் பத்திரிகையில் ஆசிரியராக அமர்ந்து மிகத் திறமையுடன் அப்பத்திரிகையை நடத்தி வருவதும் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். நண்பர் ச. கிருஷ்ணையர் அவர்கள் எட்டயாபுரத்தில் பாரதி ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது பற்றி எழுதியிருக்கும் கடிதத்தை நமது "வட்டமேஜை"யில் மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம். இன்னும், கோயமுத்தூரின் பிரசித்த காங்கிரஸ் தொண்டரும் தற்போது 'பரோலி'ல் வெளியில் இருப்பவருமான ஸ்ரீ கே. சுப்பிரமணியம் ('சுப்ரி'), திருநெல்வேலி கலாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ ஆ. முத்துசிவம் ஆகியவர்களின் கடிதங்களையும் வட்டமேஜையில் காணலாம். இன்னும் சில நண்பர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைக் காகிதத்தில் எழுதாமல் மணியார்டரிலும், செக்கிலும் எழுதித் தெரிவித்திருக்கிறார்கள். மொத்தத்தில், தமிழ் மக்கள் அநேகம் பேருக்கு, ஸ்ரீ வி. ரகுநாதனுடைய ஐந்து ரூபாயை அவருக்கு நாம் திருப்பி அனுப்பிவிடக் கூடாதென்பதில் அசாத்திய சிரத்தை என்பதாகத் தெரிகிறது! ஆகவே, பொதுஜன அபிப்பிராயத்தை மதித்து நாமும் ஸ்ரீ வி. ரகுநாதனுக்கு (அவருடைய ஐந்து ரூபாயைத் திருப்பி அனுப்பாமல்) நாமத்தைச் சாத்தி விடுவதென்று தீர்மானிக்க வேண்டியதாயிற்று! பாரதியார் பிறந்த எட்டயாபுரத்தில் பாரதியாரின் ஞாபகச் சின்னம் ஒன்று நிறுவுதல் அவசியம் என்பது பற்றி நமக்கு எவ்விதச் சந்தேகமுமில்லை. நல்ல காரியந்தான்; அவசியமான காரியந்தான். ஆனால் காரியத்தை நடத்துவதற்கு நாள் நட்சத்திரம் சந்தர்ப்பம் சரியாயிருக்கிறதா என்பது பற்றிச் சந்தேகம் இருந்தது. அதை நமது நண்பர்கள் தீர்த்து வைத்துப் பொறுப்பையும் நமது தலையிலே கட்டி விட்டார்கள். தமிழ்நாட்டின் தேசிய மகா கவியைக் கௌரவிக்கும் விஷயத்தில் தமிழ் மக்கள் போட்டி போட்டுக்கொண்டு முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

மரண தண்டனை

உலகத்து அறிஞர்களும் பெரியோர்களும் "மரண தண்டனை" என்பதையே ஒழித்து விடவேண்டுமென்று நெடுங்காலமாகச் சொல்லி வருகிறார்கள். ஏனெனில், மனிதர்கள் நீதிபதிகளாக விளங்கும் கோர்ட்டுகளில் கண்டிப்பாக உண்மை கண்டு பிடிக்கப்பட்டு, நிச்சயமாக நீதி வழங்கப்படும் என்று சொல்வதற்கில்லை. கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பை மேல் கோர்ட்டும், மேல் கோர்ட்டின் தீர்ப்பை அதற்கு மேல் கோர்ட்டும் ரத்து செய்து விடுவதிலிருந்தே, மனித ஜட்ஜுகள் வழங்கும் நீதியின் போக்கை நாம் அறியலாம். சாதாரண விஷயங்களில் நீதி கொஞ்சம் முன் பின்னாக இருந்தாலும் பாதகமில்லை. அநீதி நேர்ந்து விட்டதாகப் பின்னால் தெரிந்தால் ஒருவாறு பரிகாரம் செய்யக் கூடும். ஆனால் உயிரையே வாங்கி விட்டால் அப்புறம் பரிகாரம் ஏது? ஆகையினால்தான் மரண தண்டனை ஒழிய வேண்டுமென்று எத்தனையோ அறிஞர்கள் கூறி வருகிறார்கள்.





விநோலியா உபயோகித்து ஸ்நானம் செய்தால் குளிர்ச்சி உண்டாகும் போது நீங்கள் ஏன் வெப்பத்தினால் கஷ்டப்பட வேண்டும். இந்த சோப்பின் வெண்ணிறம் வாய்ந்த நுரை உங்களை சுத்தமாக்கும் பொழுது ஏன் வியர்வையுடன் இருக்கவேண்டும். விநோலியா சோப்பின் வாசனை களைப்பையும், உத்ஸாகத்தையும் உண்டுபண்ணி, மனதிற்கு சுகத்தையும் அளிக்கிறது.



விநோலியா ஒயிட் ரோஸ் ஸோப்பு

VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND

கல்கி
பொருளடக்கம்

மலர் 4
இதழ் 14

1944 நவம்பர் 5

தாரண ௵
ஐப்பசி 20

காரியத்துக்குத் தகுந்த மனிதர் கிடைப்பது அருமை; மனிதருக்குத் தகுந்த காரியம் கிடைப்பதும் அருமை. இவை இரண்டும் பொருத்தமாகச் சேர்ந்திருக்கும் சம்பவம் கோயமுத்தூரில் நாளது 4உ 5உகளில் நடைபெறுகிறது. "தினசரி" ஆசிரியர் ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் கோவையில் நடைபெறும் தமிழ் மாகாண எழுத்தாளர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்து நடத்துகிறார். ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் தமிழ் எழுத்தாளராகி இன்றைக்கு இருபத்தைந்து வருஷத்துக்கு மேலாகிறது. நாவல்கள், கற்பனைச் சித்திரங்கள் முதல் தினசரிப் பத்திரிகை தலையங்கங்கள் வரையில் பலவகை எழுத்துத் துறையிலும் அநுபவம் படைத்தவர். முக்கியமாக, அரசியல் துறையில் வெட்டு ஒன்றும், துண்டு இரண்டுமாக எழுதுவதில் பெயர் பெற்றவர். சமீபத்தில், எழுத்தாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு பெரும் போராட்டம் நடத்திப் பிரமாதமான வெற்றி படைத்தவர். இத்தகையவரின் தலைமையில் கூடும் தமிழ் எழுத்தாளர் மகாநாடு மிகச் சிறப்பாக நடந்து தமிழ் எழுத்தாளர் உலகில் ஒரு புதிய யுகத்தை ஆரம்பித்து வைக்குமென்று எதிர் பார்க்கிறோம்.

★



★



உங்கள் மனதிற்குகந்த நறுமணம்
தொண்டைக்குக் கெடுதல் செய்யாது

டிலக்ஸ் டெனார் சிகரெட்டின் உண்மை மணத்தை நீங்கள் விரும்புவீர்கள். உயர்ந்ததும், அவசியமானதுமான பண்டங்கள் கிராக்கியாய் விற்கும் இக்காலில் கூட இந்த சுகம் நிறைந்த சிகரெட்டுகள் நம்மில் பலர் வாங்கக்கூடிய விலைக்கே விற்கப்படுகின்றன. உத்தரவாதமுள்ள 100% வர்ஜீனியா புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்டது டெனார் சிகரெட்டுகள்.

டி லக்ஸ் டெனார் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

Tenor is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA



பிஸி. இரண்டாம் நூற்றாண்டிலும் ஸ்நானம் சாவகாசமாக செய்து இன்புற வேண்டிய ஓர் முக்கிய காரியமாயிருந்தது. கல்லில் செதுக்கின மஞ்சத்தின் மீது இராஜவம்ச ரமணிகள் சொகுசாக சாய்ந்துகொண்டு வீற்றிருக்க நங்கைகள் ஜலத்தில் ஊற வைத்து சுத்தமான நுரை வரும்படி செய்துள்ள சோப்புக் காய்கள் தேய்த்து அவர்களை ஸ்நானம் செய்வித்து வந்தனர். இன்றோ, இன்னும் மேலானதும் அதிக சௌகரியமுமான வழிதான் எல்லோருக்கு மிருக்கிறதே — அதாவது ஹமாம் சோப்பு! ஹமாமின் நறுமணம் கமழும் ஏராள நுரையானது மயிர்க் கண்களினுள் ஊடுருவிப் பாய்ந்து நன்கு சுத்தம் செய்வதோடு, களைப்பை நீக்கி மட்டற்ற உற்சாகமும் சுகமும் அளிக்கவும் செய்கிறது.

ஹமாம்



உங்கள் ஸ்நானத்திற் குகந்த பேசிய சோப்பு

டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியர் தெரு, த. பெ. 31,
மதராஸ்